சந்திர இரகசியத்தைக் கண்டுபிடிப்பதில் விஞ்ஞானிகள் தீவிரம்

Registered as a News paper in Ceylon விலை சதம் 15

ஈழநாடு

EELANADU

தபால் பெட்டி எண் 49 மலர் 11
போன்: 389 National Tamil Daily இதழ் :168
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் ஆடி 15 ஜ: அவ் 14 புதன்கிழமை [30-7-69]

மோட்டார்-வாகன-யந்திரங்களுக்கு!
கிருங்சாவ்ற் - கிறைன்டிங்
சிலின்டர் - றிபோறிங்
கெட் - மணிபோல்ட் - பேசிங்
லின் - போறிங் - எலினிங்
கிறங் - வெல்டிங்
ரெட் - கிறைன்டிங்
செய்து கொடுக்கப்படும்.
ராமகிருஷ்ணஸ்
ஸ்ரான்லி ரோட் யாழ்ப்பாணம்.
போன்: 7179

ஹூஸ்டன், ஜூலை 29

சந்திரனிலிருந்து அப்பல்லோ வீரர்கள் கொண்டு வந்துள்ள மண்மாதிரிகளும், கற்துண்டுகளும் இப்பொழுது நுணுக்கமாக ஆராயப்பட்டுவருகின்றன.

மண்ணிலும், கற்களிலும் துரிபடிந்திருக்கிறது. இக்கற்களோ சிறு துண்டுகளாக நறுக்கினால் அல்லாமல் அதன் உள்ரகசியங்களோ அறியமுடியாது என்று கருதப்படுகின்றது. இன்னும் சில தினங்களில் இந்தக் கற்துண்டுகள் சிறு துண்டுகளாக அறுக்கப்பட்டு சோதிக்கப்படலாம் என்று தெரிகின்றது.

ஏற்கனவே செய்யப்பட்ட ஆராய்ச்சிகளில் இந்த மண்ணின் அமைப்புப்பற்றிய இரகசியம் வெளிப்படாது போனாலும் அதில் சிறு கண்ணாடிப் படிவங்கள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

விண்வெளி வீரர்கள் கொண்டுவந்துள்ள மண், கல் மாதிரிகள் பல பகுதிகளாக பிரிக்கப்பட்டு வெவ்வேறு பெட்டிகளில் அடைத்து வைக்கப்பட்டுள்ளன.

விண்வெளி வீரர்கள் நீல்ஆம்ஸ்ரோங், எட்வின் ஆல்ட்ரின், மைக்கேல் கொல்லின்ஸ் ஆகிய மூவரும் விண்வெளியில் தாம் பெற்ற அனுபவங்கள்பற்றி விஞ்ஞானிகளிடம் விளக்கி வருகிறார்கள்.

அடுத்த மாதம் 12-ம் திகதி வரையில் அவர்கள் 'குவாரன்டைன்' அறையில் இருப்பார்கள். 13-ம் திகதி லொஸ் ஏஞ்சலஸில் அவர்கள் மூவருக்கும் அதிபர் நிக்ஸன் விருந்தளிப்பார். அவர்களின் மனைவிமாரும் விருந்தில் கலந்துகொள்வார்கள்.

மாவை கோயிலின்முன் சத்தியாக்கிரகம் செய்வாராம்

யாழ்ப்பாணம், புதன் மாவிட்டபுரம்கந்தசுவாமி கோவில் ஹரிஜனங்களுக்கு திறந்து விடப்படாவிடில், தேர்த்திருவிழாவுக்கு முன்பு ஒரு தினம் கோவில்வாசலில் சத்தியாக்கிரகம் செய்வதென நேற்று நடை பெற்ற சிறுபான்மைத் தமிழர் ஐக்கிய முன்னணி கூட்டத்தில் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

திரு வி. கதிரவேலு தலைமையில் நடை பெற்ற இக்கூட்டத்தில் அடுத்தமாதம் 5-ம் தேதி சகல அரசியல் கட்சி தலைவர்களையும், ஆட்சிமன்ற உறுப்பினர்களையும், இந்து மதஸ்தாபன உறுப்பினர்களையும் அழைத்து யாழ்ப்பாணத்தில் ஒரு மகாநாட்டை நடத்துவதென்றும் முடிவு செய்யப்பட்டது.

மாவிட்டபுரம் கந்தசாமி கோவில் முகாமையாளரை சந்தித்து ஹரிஜனர்களுக்கு அமைதியான முறையில் ஆலயத்தை திறந்து விடும்படி, வேண்டுகோள் விடுவதென்றும், இது பயனளிக்காவிடில் தேர்த்திருவிழாவிற்கு முன்பு ஒரு தினம், கோயில் வாசலில், ஹரிஜனர்கள் பெரும் திரளாக கூடி சத்தியாக்கிரகம் செய்வதென்றும் முடிவுசெய்யப்பட்டது.

கோவில் முகாமையாளர் திரு. துரைசாமி குருக்கள் மீது வழக்கொன்றை தாக்கல் செய்வதென்றும் இவ் வழக்கு சம்பந்தமாக சிரேஸ்ட வழக்கறிஞர்களுடன் ஆலோசனை செய்வதென்றும் முடிவு செய்யப் பட்டது.

வேலையில்லா திண்டாட்டத்துக்கு விடிவு ஏற்படலாம்

வரவு செலவுத் திட்டம் இன்று சமர்ப்பிக்கப்படுகிறது

கோட்டை, புதன்

இன்று ஆட்சிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட விருக்கும் தேசிய அரசாங்கத்தின் இறுதி வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் வேலையில்லாப் பிரச்னையைத் தீர்ப்பதற்கான வழிவகைகள், அரசாங்க ஊழியர்களின் சம்பள உயர்வு, வாழ்க்கைச் செலவு குறைப்பு ஆகியவற்றுக்கு முக்கிய இடமளிக்கப்படுமென எதிர்பார்க்கப் படுகிறது.

நிதிமந்திரி இன்று இந்த வரவு செலவுத் திட்டத்தைச் சமர்ப்பிப்பார்.

ஆகஸ்ட் 2-ம் திகதி வரவு செலவுத் திட்டம் மீதான உரையை நிதிமந்திரி நிகழ்த்துவார்.

இவ்வரவு செலவுத் திட்டம் பொது மக்களுக்கு கூடிய நன்மையளிக்கக் கூடிய விதத்தில் அமையுமென அரசாங்கக் கட்சியினர் நம்புகின்றனர்.

ஆயினும் எதிர்க் கட்சியினர் இவ்வரவு செலவுத் திட்டம் ஒடு கண் துடைப்பாக இருக்குமெனக் கூறிக் கொள்கின்றனர். அடுத்த பொதுத் தேர்தலின் போது மக்களை ஏமாற்றுவதற்காக நடத்த முடியாத' ஒரு வரவு செலவுத் திட்டமாகவே இது இருக்குமென வும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

புதிய தமிழ் அரசியல் கட்சியின் நோக்கம்

யாழ்ப்பாணம், செவ்.

புதிய தமிழ் அரசியல்கட்சிக்கு ஈழசுயாட்சிக்கழகம் என்று நேற்று பெயர் சூட்டப்பட்டது.

புதியகட்சியின் ஆலோசனைக் கூட்டம் நேற்றுமாலை யாழ்ப்பாணம் மலையாகபே மேல்மாடியில் தீவுப்பகுதி எம்.பி. திரு. வி. நவரத்தினம் தலைமையில் நடைபெற்றது.

வடக்கு கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த பலர் இக்கூட்டத்தில் கலந்துகொண்டார்கள்,

அடுத்தமாதம் 27-ம்திகதி யாழ்ப்பாண நகரமண்டபத்தில் புதிய கட்சியின் அங்குரார்ப்பணக் கூட்டத்தை நடத்தி உத்தியோகத்தர்களைத் தெரிவுசெய்வதெனவும் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

நேற்றைய கூட்டத்தில் அமைப்பு விதிகள் வாசிக்கப்பட்டு ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

உலக அரசியல் கொந்தளிப்பு ஏற்படும் நேரத்தில் ஈழத்தமிழ் நாடு அமைக்க போராட்டத்தை நடத்துவதென்றும் தீர்மானித்துத் தெரிவிக்கப்பட்டது. பாகிஸ்தான் பிரிவினைக்குவித்திட்ட வழிகளைப் பின்பற்றி இங்கும் போராட வேண்டுமென பலர் கருத்துத் தெரிவித்தனர். மற்றும்காமன்வெல்த் நாடுகளைப்போல் ஈழத்தமிழ் நாடும் இயங்கும் என தீவுப் பகுதி எம். பி. திரு. வி. நவரத்தினம் தெரிவித்தார்.

இலங்கையை குடியரசாக்கத் தீர்மானம் எடுக்கப்படும்போது தமிழர்கள் குடியரசை விரும்பவில்லை என்று கூறி தனியாக காமன் வெல்த் நாடுகளைப் போல இயங்க வேண்டுமென அவர் தெரிவித்தார்

அடுத்த தேர்தலில் வடக்கு மாகாணங்களில் எல்லாத் தொகுதிகளிலும் கிழக்கு மாகாணங்களிலுள்ள சில பகுதிகளிலும் போட்டியிட வேண்டுமென்றும் கருத்து தெரிவிக்கப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் இடதுசாரி கட்சியைச் சேர்ந்த சிலரும்கலந்துகொண்டனர்

யாழ்ப்பாணம், செவ்

வல்லிபுர ஆழ்வார் கோவில் முசாமையாளர் மீது கதவடைப்புக் கெதிராக பரிபாலன சபை அங்கத்தர் ஒருத்தித்துறை மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கொன்றை தாக்கல் செய்துள்ளார்,

இவ்வழக்கு பற்றிய மேல் நடவடிக்கை இன்று எடுக்கப் படவிருக்கிறது.

'சொந்தஅபிலாஷைகளுக்கு மதிப்பு கொடுக்காதவர்'

ஸ்கந்தா அதிபருக்கு பாராட்டு

யாழ்ப்பாணம், புதன்

"எத்தனையோ [illegible] பதவிகளை [illegible] வகித்து தமது சொந்த அபி

திரு. துரைராஜா பேசுகை [illegible] பெற்கண்டாறு தெரி [illegible]

கல்லூரி உப அதிபர் திரு. [illegible]

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மன்னர் பகுதியில் பரபரப்பு

வீட்டிலிருந்து காணமல் போனவர் காட்டில் எரிந்து கிடந்தார்

'கொலை'யென பொலிஸ் சந்தேகம்

வடமராட்சி சுகாதாரவிழா இன்று ஆரம்பமாகிறது

இமையாணன், புதன்

வடமராட்சிப்பகுதியில் மக்கள் சுகாதாரவாரம் இன்று ஆரம்பமாகிறது. தொடர்ந்து ஏழு நாட்களுக்கு நடைபெறும். இவ் வாரத்தில் ரொமங்களில் மாதிரிச் சுகாதாரப் பணிகளும், அம்மைப்பால் கட்டுதல், கருத்தரங்கு, கதம்ப நிகழ்ச்சிகள், பொருட் காட்சி, பொதுக்கூடம் முதலியன நடை பெற ஒழுங்கு செய்யப்பட்டுள்ள துடன் உணவு விடுதிப் போட்டி, தாய், சேய் ஆரோக்கியப்போட்டி, கதம்பநிகழ்ச்சிப் போட்டி முதலியனவும் நடைபெறும்.

3-ம் திகதி பிற்பகல் 3-30 மணியளவில் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெறவிருக்கும் சுகாதாரப் பொருட் காட்சி ஒன்றை சுகாதார அமைச்சர் திரு. ஈ. எல். சேனநாயக்கா திறந்துவைப்பார்.

சனிக்கமையச் சுகாதாரப் பணிகளில தொண்டாற்றுவார்கள்.

யாழ். மாவட்ட சுகாதார சேவை அத்தியட்சகரான வைத்திய கலாநிதி எஸ். இராசரத்தினம், யாழ். மாவட்ட உதவி அரசாங்க அதிபரான திரு. ரி. முருகேசம்பிள்ளை, யாழ். மாவட்ட சுகாதாரசேவை பிரதி அத்தியட்சகரான வைத்தியகலாநிதி கே. சற்குரு, வடமராட்சி சுகாதார வைத்திய அதிகாரியான என். புவிராசசிங்கம், வடமராட்சிக் காரியாதிகாரியான திரு எஸ் ஜெயகாந்தன் ஆகியோர் மேற்படி பகுதிகளுக்கு விஜயம் செய்து ஆங்காங்கு நடைபெறும் சுகாதாரப்பணிகளில கலந்துகொள்வர்.

சுகாதாரக் கருத்தரங்கு

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

...ருந்து காணாமல் போனவர் காட்டில் எரிந்து கிடந்தார்

'கொலை'யென பொலிஸ் சந்தேகம்

யாழ்ப்பாணம், புதன்

நான்கு நாட்களுக்கு முன்னர் வீட்டிலிருந்து காணாமல் போனவரைகண்டு பிடிக்க சென்ற பொலிஸார் அவரது எரிந்தசாம்பரையும், எலும்புக் கூட்டையும்தான் கண்டுபிடித்தனர்.

இந்தச் சம்பவம் மன்னார் பொலிஸ் பகுதியில பெரும் பரபரப்பைக் கடந்த இரண்டு நாட்களாக ஏற்படுத்தியுள்ளது. இங்குள்ள தேரடிமுறிப்பு என்ற இடத்தைச் சேர்ந்த பெருமாள் கறுப்பையா என்பவரே இவ்வாறு உடல் கருகிய நிலையில் காணப்பட்டவராவர்.

இம்மாதம் 25-ம் திகதி காணாமல் போன இவர் கொலைசெய்யப்பட்ட பின்னர் இவ்வாறு எரிக்கப்பட்டிருக்கலாமென மன்னார் பொலிசார் திட்டவட்டமாக நம்புவதாகப் பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

உதவிப்பொலிஸ் சுப்பிரிண்டென்ட் திரு குணவர்த்தன, தலைமைக் காரியாலய இன்ஸ்பெக்டர் திரு மென்டிஸ் ஆகியோர் தலைமையிலான பொலிஸ் கோஷ்டி புலன்விசாரணையில் ஈடுபட்டுள்ளது. சந்தேக நபர் எவரும் கைதாகவில்லை.

உடலின் சில உறுப்புகளும், தடயப்பொருட்களும் வைத்திய சோதனைக்காக கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

(கா-நி)

"கைத்தொழில் மயமானல் பிரச்னைகள் இருக்காது"

வென்னப்புவ, செவ்வாய்

'நாட்டில் கைத்தொழிலையும், விவசாயத்தையும் அபிவிருத்தி செய்வதற்கு தங்களால் இயன்றளவுக்கு உழைக்கும் விருப்புடையவராக ஒவ்வொரு பிரஜையும் இருக்கவேண்டும். நாட்டின் பல பிரச்னைகளுக்குத் தீர்வு காணவேண்டுமெனில் நாட்டைக் கைத்தொழில் மயமாக்கவேண்டியது அவசியமாகும் இவ்வாறு செய்தால் இன்று இறக்குமதி செய்யும் பொருள்களால் ஏற்படும் அன்னிய செலாவணியை மீதப்படுத்தலாம்.

வென்னப்புவத் தொகுதியில் ஒரு மரத்தொழிற் சாலையைத் திறந்து வைத்துப் பேசிய வென்னப்புவ ஆட்சிமன்ற அங்கத்தவர் திரு. பெஸ்ரஸ் பெரேரா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில், ''கைத்தொழில் நாடுகளில் வேலையில்லாப்பிரச்னை என்ற ஒன்றே இல்லை. ஆனால் ஜனத்தொகை கூடிய அபிவிருத்தியடையாத நாடுகளில் இப்பிரச்னை தலைதூக்கி நிற்கிறது. இலங்கையில் இப்பிரச்னைக்குத் தீர்வு காண வேண்டுமானல் நாம் எம்மால் இயன்றளவு முயர்சி செய்து கைத்தொழில்களை உருவாக்க வேண்டும்'' என்றார்.

மாவை ஆலயத்துக்குள்

உபயகாரர் உதவியாளர்

உள்ளே செல்வது முறையானது

அட்டோர்னி ஜெனரல் அறிவிப்பு

யாழ்ப்பாணம், செவ்

மாவிட்டபுரம் கந்தசாமி கோவிலுக்குள்ளே உபயகாரர் தங்களுக்கு தேவையான உதவியாளரை பொலிஸாருக்கு அறிவித்தபின் கொண்டு செலவது முறையானது என அட்டோர்னி ஜெனரல அறிவித்திருப்பதர்க பொலிஸ் உயர் அதிகாரி ஒருவர் நேற்று முன்தினம்தெரிவித்தார்.

உபயகாரர் தங்களுக்குத் தேவையான உதவியாளரை ஆலயத்திற்குள் கொண்டு செலவது சரியானதா, என்று பொலிசார் அட்டோர்னி ஜெனரலிடம் ஆலோசனை ...ட்டிருந்தனர். உபயகார... உதவியாளர் செலல...யுண்டென்றுல, தாங்...சலலலாம் என கூறு...பான்மைத்தமிழர்கள் கருத்துத் தெரிவித்ததைத் தொடர்ந்தே பொலிசார் அட்டோர்னி ஜெனரலின் ஆலோசனையை கேட்டார்க எனத்தெரியவருகிறது.

ஆலயத்திற்கு வெளியே எல்லாரும் நின்று வழிபடுவதால் உபயகாரரின் உதவியாளர் உள்ளே செல்வது முறையானது என அட்டோர்னி ஜெனரல தெரிவித்திருப்பதாக அறியப்படுகிறது. உபயகாரரின் உதவியாளர், கோயிலுள்ளே வழிபடச்செல்ல விலலையென்றும் உதவி செய்வதற்காகவே செலகின்றுர்களென்றும், அட்டோர்னி ஜெனரலின் கருத்தாக இருப்பதாக தெரியவருகிறது.

லேன் அவுட் ஒவ் ஓடரில் மாற்றமில்லை

யாழ்ப்பாணம், புதன்

போயாதினமானலும் கூட 'லேன் அவுட் ஒவ் ஓடர்' ஆவதில் எந்த மாற்றமுமில்லை என்பதை யாழ்ப்பாணம் தபால்நிலையம் நேற்று முன்தினம் நிருபித்துக் காட்டியது.

போஸ்ட்மாஸ்டர் ஜெனரலான திரு. வேர்ணன் அப்யசேகரா நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் தபாற் கந்தோருக்கு விஜயம் செய்திருந்தபோதே இச்சம்பவம் நடைபெற்றது.

யாழ்ப்பாணம்-கொழும்பு லைனிலுள்ள மூன்று தொடர்புகளில் இரண்டு தொடர்புகள் பழுதாகியிருந்ததையும், இதனல் சுமார் நூற்றுக்கும் மேற்பட்ட 'ட்ரங்கோல்'கள் தொடர்பின்றிக் கிடப்பதையும் திரு. வேர்ணன் தனது நேரடி விஜயத்தில் கவனித்துக் கொண்டார்.

(கா. நி.)

பஸ் நிலையத்தில் துர் நாற்றம்

மன்னார், செவ்வாய்

மன்னார் பட்டணத்தில் உள்ளபஸ்நிலையத்தில்அமைக்கப்பட்டிருக்கும்மலசலகூடத்திலிருந்து அசுத்தநீர் வடிந்து செல்வதற்குரிய அமைப்பின்மையால் துர்நாற்றம் உண்டாகின்றது. இதனல்பொது சனப்பாவிப்பிற்கென நிறுவப்பெற்ற மலசலகூடத்தை பாவிக்கமுடியாது பொது சனங்கள் கஷ்டப்படுகின்றனர்.

ஸ்கந்தா அதிபருக்கு பாராட்டு

யாழ்ப்பாணம், புதன்

''எத்தனையோ சிறந்த பதவிகளை அரசாங்கத்தில் வகித்து தமது சொந்த அபிலாஷைகளை நிறைவேற்றக்கூடிய சூழ்நிலையிலும் கல்லூரியின் வளர்ச்சியில் அக்கறை கொண்டு தம்மைத் தியாகம் செய்தவர் அதிபர் திரு. வி. சுப்பிரமணியம்.''

சுன்னாகம் ஸ்கந்தவரோதயா கல்லூரி அதிபராகக் கடமையாற்றி ஓய்வுபெறும் திருவி. சுப்பிரமணியத்துக்கு கல்லூரி ஆசிரியர்களால் அளிக்கப்பட்ட பிரியாவிடை தேநீர் விருந்தில் ஆசிரியர் திரு. துரைராஜா பேசுகையில் மேற்கண்டாறு தெரிவித்தார்.

கல்லூரி உப அதிபர் திரு. க. சிவகுமாரன் பேசுகையில் ஆசிரியத் தொழிலில் இன்பம் கண்டு, உண்மை உழைப்பாளியாக கல்லூரியின் உன்னத ஸ்தானத்திற்கு அதிபர் செய்த சேவைகள் பற்றி எடுத்துக் கூறினார்.

திருவாளர்கள் விஜெயரத்தினம், ராஜசிங்கம், ஞானச் சந்திரமூர்த்தி, திருமதி கணபதிப்பிள்ளை ஆகியோர் உட்படப் பலரும் பேசினார்கள்.

(கா. நி)

'அரசியலில் ஈடுபடுவதா?'

பட்டதாரிகள் ஆலோசனை

யாழ்ப்பாணம், புதன்

அகில இலங்கை வேலையற்ற பட்டதாரிகள் சங்கம் அரசியலில் ஈடுபட வேண்டுமா? என்பதுபற்றி நேற்று நடந்த கூட்டத்தில், நீண்டநேரம் ஆராயப்பட்டது இவ்விஷயம் எவ்வித முடிவும் எடுக்கப் படாமல் ஒத்திவைக்கப் பட்டது.

யாழ்ப்பாணத்தில் திரு. கே. சதானந்தன் தலைமையில் நடைபெற்ற அக் கூட்டத்தில் வேலை வாய்ப்பு பிரச்னை பற்றி பல கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன.

காரியதரிசியாக திரு செ. பத்மநாதனும், உப தலைவராக திரு. ரி. சுப்பிரமணியமும், தெரிவு செய்யப் பட்டனர். பழைய காரியதரிசி வேலை வாய்ப்பு பெற்றுச் சென்றபடியால் இத்தெரிவு நடைபெற்றது.

அரசியல் கட்சிகள் வேலையற்றவர்களின் பிரச்னையைப் புறக்கணித்தால், மீண்டும் சிங்களப் பட்டதாரிகளுடன் இணைந்து போராட வேண்டிய நிலையும் ஏற்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

தற்கால வேலை வாய்ப்புகள் பற்றி அரசாங்க அதிபரைச் சந்தித்து ஆவன செய்யவேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது.

நாரந்தனை கி. ச. புதிய தலைவர்

அல்லைப்பிட்டி, செவ்வாய்

நாரந்தனை கிராமசபையின் புதிய தலைவர் தெரிவு இன்று வடமாகாண உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. அ. அ. யோசப் தலைமையில் நடைபெற்ற போது தம்பியப்பா சண்முகலிங்கம் ஓர் அதிகப்படியான வாக்கினல் புதிய தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார். இவரை எதிர்த்துப் போட்டியிட்ட முன்னைநாள் கிராமசபைத் தலைவர் திரு. சவரிமுத்து அருமைநாதருக்கு ஆறு வாக்குகளும் திரு. சண்முகலிங்கத்துக்கு ஏழு வாக்குகளும் கிடைத்தன. உப தலைவராக ஏழாம் வட்டார உறுப்பினர் தாமோதரம் பிள்ளை திருஞானசம்பந்தமூர்த்தி தெரிவு செய்யப்பட்டுள்ளார். இத்தெரிவின் போது உள்ளூராட்சி அலுவலக ஆய்வு உத்தியோகத்தர் திரு. ப. பரஞ்சோதியும் சமூகமளித்திருந்தார். தலைவரையும், உபதலைவரையும் மக்கள் மாலையிட்டு ஊர்வலமாக அழைத்துச் சென்றன.

உண்ணாவிரதத்திற்கு ஆதரவு

யாழ்ப்பாணம், புதன்

சிறுபான்மைத் தமிழர் மகாசபையினர் அடுத்த மாதம் 2-ம் திகதி நடாத்தவிருக்கும் உண்ணாவிரதத்திற்குத் தொண்டர்களை வழங்கி ஆதரவு கொடுப்பதென நல்லூர் ஜனசக்தி சனசமூக நிலையம் ஏகமனதாக முடிவு செய்துள்ளது. நிலையக் கூட்டம் அதன் தலைவர் திரு. ச. பூவிலிங்கம் தலைமையில் நடைபெற்றது.

விளையாட்டுப் பிரிவுக் காரியதரிசி திரு. குமாரசாமி பேசுகையில் பெரும்பான்மையினரிடையேயும் முற்போக்கு வாதிகளிருப்பதாயும், எனவே பெரும்பான்மையினரைப் பகைக்காமல் உரிமைப் போராட்டத்திற்கு அவர்களின் ஆதரவையும் பெறவேண்டுமென்றும் சொன்னர்

மக்களை ஏமாற்றுவதற்காக நடத்த முடியாத' ஒரு வரவு செலவுத் திட்டமாகவே இது இருக்குமெனவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

அடுத்த வருட முற்பகுதியில் அரசு பெருத்த பொருளாதார நெருக்கடிக் குள்ளாகுமெனவும் எதிர்க் கட்சிப் பிரமுகர் ஒருவர் ஷோஸ்யம் கூறுகிறார்.

யாத்திரீகர்களுக்கு விசேஷரயில்சேவை

கோட்டை, செவ்

மடு திருவிழாவையொட்டி ஆகஸ்ட் 15-ம் திகதியிலிருந்து வழமையான புகையிரத சேவையுடன் குறைந்த பிரயாணக் கட்டணத்தோடு விசேஷ புகையிரத சேவைகளும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

இத்திருவிழா ஆகஸ்ட்15ம் திகதி ஆரம்பமாகிறது. இவ் விசேஷ புகையிரத சேவை ஆகஸ்ட் 8-ம்திகதி தொடக்கம் 17-ம் திகதி வரை நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

3-ம் திகதி பிற்பகல் 3-30 மணியளவில் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெறவிருக்கும் சுகாதாரப் பொருட்காட்சி ஒன்றை சுகாதார அமைச்சர் திரு. ஈ. எல். சேனநாயக்கா திறந்துவைப்பார்.

அதையடுத்து அன்றிரவு சுகாதார அமைச்சர் முன் கதம்பநிகழ்ச்சிகளும் அரங்கேற்றப்படுவதுடன் அடுத்த நாள் ஞாயிற்றுக்கிழமை இரவு நடைபெறவிருக்கும் பொதுக் கூட்டத்திலும் கலந்துகொண்டு சொற்பொழிவாற்றுவார்.

இன்று முற்பகல் 9 மணி தொடக்கம் 12 மணி வரை அல்வாய் தெற்கில் உள்ள அம்மன்கோவிலின் சுற்றுடலிலும் புலோலி தெற்கிலுள்ள உபய கதிர்காமப் பகுதியிலும் பொலிகண்டியில் கொத்தாவத்தைப் பகுதியிலும், வல்வெட்டித்துறையிலுள்ள இலக்கணாவத்தையிலும், பாடசாலை ஆசிரியர், மாணவ மாணவிகள் சனசமூகநிலைய, கிராமமுன்னேற்றச்சங்கத் தொண்டர்கள், கிராம மக்கள் ஆகியோர் சிரமதானம் மூலம் அவ்வப்பகுதி சுகாதாரப் பரிசோதகர்களின் ஆலோசனைப்படி செய்து ஆங்காங்கு நடைபெறும் சுகாதாரப்பணிகளில கலந்துகொள்வர்.

சுகாதாரக் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், புதன்

குடும்பநலத் திட்டம், மலேரியா ஆகியன பற்றிய கருத்தரங்கொன்று நாளை (31-ம் திகதி) நெலலியடி மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெறவிருக்கின்றது.

சுகாதாரப்பகுதியினரால ஒழுங்குசெய்யப்பட்டுள்ள இக்கருத்தரங்கில் கொழும்பு, தெலலிப்பழை, யாழ்ப்பாணம் ஆகியவற்றைச் சேர்ந்த பல்வேறு நிபுணர்களும் சொற்பொழிவாற்றுவார்கள்.

இதனைத் தொடர்ந்து அடுத்தமாதம் 4-ம் திகதி இங்கு சுகாதாரப் பொருட்காட்சியொன்றும் நடைபெறும், சுகாதார அமைச்சர் திரு. ஈ. எல். சேனநாயக்கா இதனைத் திறந்துவைப்பார்.

(கா-நி)

வடபகுதி அசைஸ் விசாரணை

மானிப்பாய் பலாத்கார வழக்கில் விசாரணை நடுவில் எதிரி விடுதலை

யாழ்ப்பாணம், புதன்

மானிப்பாய் பலாத்கார வழக்கில் எதிரி விடுதலை செய்யப்பட்டார். விசாரணை முடிவில் ஜூரிசபையினர் தனிமையில் கூடி மந்திராலோசனை செய்தபின் எதிரி குற்றவாளியல்லவென ஏகமனதாகத் தீர்ப்பளித்ததைத் தொடர்ந்து நீதியரசர் எதிரியை விடுதலை செய்தார்.

இவ்வழக்கில் சாட்சியமளித்த ஆறுமுகம் மகள் மகுடராணி (வயது 20) கூறியதாவது:-

நான் மானிப்பாய் மருதடிப் பிள்ளையார் கோவிலடியில் பஸ்ஸிலிருந்து இறங்கி வீட்டிற்குச் சென்று கொண்டிருந்தேன். அப்பொழுது பின்னல் வந்து கொண்டிருந்த எதிரி என் கையைப் பிடித்திழுத்தார். நான் அவரைத் தள்ளிவிட்டு ஓடினேன் அவர் மீண்டும் என்னைப் பலாத்காரம் செய்தார்.''

இவ்வழக்கு நேற்றுக்காலை வடபகுதி அசைஸ் கோர்ட்டில் நீதியரசர் ஓ. எல். டி. கிறெட்சர் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது.

இவ்வழக்கில் மானிப்பாயில் 66-ம்ஆண்டு மே 2ந் தேதி சின்னத்தம்பி சின்னராசா என்பவர் ஆறுமுகம் மகள் மகுடராணியை பலாத்காரம் செய்தார் எனக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

எதிரிசார்பில் அட்வகேட் கே. வி. எஸ். சண்முகநாதன் அட்வகேட் சி. முத்துக்கிருஸ்ணன் உதவியுடனும், புறக்டர் தளையசிங்கம் யோகநாதன், புறக்டர் வி. ஏ. ஈ. பாலசிங்கம் ஆகியோரின் அனுசரணையுடன் ஆஜரானர். எதிரிக்காக அரசாங்கத்தால் புறக்டர் எஸ், எஸ். பிரான்ஸிஸ் ஆஜரானர். முடிக்குரிய தரப்பில் அட்வகேட் பிரியாந்த பெரேரா ஆஜரானர்.

மகுடராணி தொடர்ந்து சாட்சியமளிக்கையில் கூறியதாவது: 'நான் தின்னவேலியில் நெசவுவேலை செய்து வந்தேன். சம்பவம் நடந்த தினம் சுகவீனம் காரணமாக 2 மணிக்கு வீடு திரும்பினேன். நான் நெருப்புக் காய்ச்சலால் பீடிக்கப்பட்டிருந்தேன். அன்று காலை 8 மணிக்கு வேலைக்குப்போனேன். வழக்கத்திலும் பார்க்க அன்று முந்தி வீட்டிற்குப் போனேன். தின்னவேலியிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு பஸ்ஸில் வந்து அங்கிருந்து மானிப்பாய்க்குப் பஸ்ஸில் போனேன். மானிப்பாய் மருதடிப்பிள்ளையார் கோவிலடியில் இறங்கினேன். வயல்வெளியால் நடந்து சென்றேன். அப்போது இருமல் சப்தம் கேட்டது. திரும்பிப் பார்த்தேன். ஒருவர் வந்துகொண்டிருந்தார். அவரை முன்பு கண்டிருக்கிறேன். பெயர் தெரியாது. இரண்டு மூன்று தடவை எதிரி பஸ் சாரதியாக இருந்ததைக் கண்டிருக்கிறேன் எதிரி என்மீது பலவந்தம் புரியும்போது அவ்வழியால் பற்குணராசா சென்று கொண்டிருந்தார். நான் எதிரியைத் தள்ளிவிட்டு வீட்டிற்குச்சென்று உடைகளை மாற்றிவிட்டுக் குளித்தேன். அதன்பின் வீட்டிற்கு வந்த தாயாரிடம் சம்பவத்தைச கூறினேன். பின் பொலிசில் வாக்குமூலமளித்தேன்

டாக்டர் எஸ். சுப்பிரமணியம் சாட்சியமளித்தார். அசைஸ் விசாரணை இன்று காலைவரை ஒத்திப் போடப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரி விளம்பரம்

விற்பனைக்கு

புத்தம்புதிய கைத்தறிகள் இரண்டு (லூம் 1, குழித்தறி 1) சகல உபகரணங்களுடனும் விற்பனைக்குண்டு தொடர்புகொள்க: P. S ஐயர், மீசாலை. 1276

முந்திரிகைக் கன்றுகள் (திராட்சை) மிகவும் இனிப்பான இஸ்ரவேல் கறுத்த இன திராட்சைக் கன்றுகள் விற்பனைக்கு உண்டு. இந்த இனத்தை தவிர வேறு நல்ல இனம் இப்பொழுது இலங்கையில் இல்லை. விலை ரூபா 2 - இ. ஞானபண்டிதன், சன்னதி ஒழுங்கை, தொண்டமனாறு. 1278

பாராட்டுவிழா

அராலி, செவ்வாய்

மூளாய் கூட்டுறவு ஆஸ்பத்திரியில் பல ஆண்டுகள் கடமையாற்றிய இளைப்பாறிய டாக்டர் க. செல்லத்துரைக்கும் அவர் பாரியாருக்கும் சங்கரத்தைவாசிகள் சேவை நலம் பாராட்டுவிழாவை சங்கரத்தை கி. மு. சங்க திறந்தவெளியரங்கில் நடத்தினர்.

ராஜா (யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
பிரிபோயா, போயா 4 காட்சிகள்
சுந்தரராஜன், மனோகர், ராமதாஸ், தங்கவேலு, பத்மினி, பேபி ராணி
நடித்த
குழந்தைக்காக

வல்வெட்டித்துறை
ரஞ்சனா தியேட்டர்
தினசரி 6-30, 9-30.
பிரிபோயா, போயா காலை 10-30
ஜெமினி - சரோஜாதேவி
நடித்த
ஆடிப்பெருக்கு

வெஸ்லி சினிமா
மானிப்பாய்
தினசரி 6-30, இரவு 10-00
பிரிபோயா, போயா 2-30 மணி
எம். ஜி. ஆர். சரோஜாதேவி
நடித்த
தெய்வத்தாய்

MANOHARA
JAFFNA
Daily 4-45, 7-00 & 9-45 p.m.
John Milles
in
COWBOY IN AFRICA

REGAL JAFFNA
Daily 4 Shows
Osmar Sharif &
Francoise Dorleac
in
GENGHIS KHAN
(Panavision/Technicolor)

சுன்னாகம் பட்டணசபை
கேள்வி பற்றிய அறிவித்தல்

சுன்னாகம் பட்டணசபைத் தலைவரால் சுன்னாகம் சந்தைக்கு முன் கட்டப்பட்டிருக்கும் கடைகள் மூன்றும் தனித்தனியாக அல்லது ஒன்று சேர்த்து வாடகைக்கு கொடுப்பதற்கான கேள்விப் பத்திரங்கள் 23-8-69 சனிக்கிழமை காலை 10 மணிக்கு முன்பதாக ஏற்றுக்கொள்ளப்படும்.

கூடுதலான வாடகை குறித்துக் கேள்விப பத்திரம் அனுப்புபவர்களுக்குக் கடைகள் வாடகைக்குக் கொடுக்கப்படும்.

மூன்று வருடத்திற்கு கடையை வாடகைக்கு எடுக்க ஆயத்தம் என்று ஒப்பந்தம் எழுதவும், ஒரு வருடத்துக்குரிய வாடகைப் பணத்தை முற்பணமாகக் கட்டவும் சம்மதிப்பவர்களின் கேள்விப் பத்திரங்கள்தான் ஏற்றுக்கொள்ளப்படும். முற்பணமாகக் கட்டப்படும் ஒரு வருட வாடகை மூன்றாவது வருடத்துக்குரிய வாடகையில் கழிக்கப்படும். மூன்றாவது வருட முடிவில் இச் சபையின் அனுமதியுடன் மாத்திரம் ஒப்பந்தம் புதிப்பிக்கப்படல்வேண்டும்.

கேள்வி ஏற்றுக்கொள்ளப்பட்டதென்று தலைவரால் அறிவிக்கப்பட்ட ஒரு வாரத்துக்குள் ஒரு வருட வாடகை முற்பணத்தையும் கட்டி ஒப்பந்தத்தையும் முடித்துக் கொள்ளவேண்டும். தவறின் அவருடைய கேள்வி நிராகரிக்கப்பட்டதாகக் கருதப்படும்.

எக்கேள்வியையும் காரணம் காட்டாமல் நிராகரிக்கத் தலைவருக்கு அதிகாரம் உண்டு.

வேண்டிய விபரங்கள் கந்தோரில் அறிந்துகொள்ளலாம்.

பொ. நாகலிங்கம்
தலைவர்
பட்டண சபை,
சுன்னாகம்.

பட்டண சபை
அலுவலகம்,
சுன்னாகம்
27-7-69 1676

கேள்வி விளம்பரம்

சுன்னாகம் பட்டணசபை

1969-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 8-ம் திகதி காலை 10-00 மணிக்கு முன் அனுபவம் வாய்ந்த கொந்தராத்துக்காரரிடமிருந்து சுன்னாகம் பட்டண சபை விளையாட்டு மைதானத்தை துப்பரவு செய்து மட்டம் செய்வதற்கு சில்லைவைத்த கேள்விகள் சுன்னாகம் பட்டண சபைத் தலைவரால் ஏற்றுக் கொள்ளப்படும்.

1969-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 7-ம் திகதி பி. ப. 2-00 மணிவரை வைப்புப் பணமாக ரூபா 25-ம், பத்திரப் பணமாக ரூபா 5/-ம் செலுத்தி கேள்விப்பத்திரம் பெற்றுக்கொள்ளலாம். கேள்விப் பத்திரத்திற்காகக் கட்டும் ரூபா 5/-ம் திருப்பிக் கொடுபடமாட்டாது.

ஏனைய விபரங்கள் யாவும் சுன்னாகம் பட்டண சபை காரியாலயத்தில் கந்தோர் நேரங்களில் அறிந்துகொள்ளலாம்.

பொ. நாகலிங்கம்,
தலைவர்,
பட்டண சபை.
சுன்னாகம்

பட்டண சபை
அலுவலகம்,
சுன்னாகம்.
26-7-69. 1675

கோட்டை, செவ்வாய்

சுகாதார சேவையிலுள்ள ஊழியர்களது குறைபாடுகளை ஆராய்வதற்காக சுகாதார அமைச்சர் திரு. ஈ. எல. சேனநாயக்கா அமைச்சைச்சேர்ந்த அதிகாரியொருவரை நியமித்துள்ளார். இவர் மூன்று மாதங்கள் வரை இதுபற்றி விசாரணை நடத்தி அறிக்கையொன்றைச் சமர்ப்பிப்பார்.

யாழ். மாவட்ட பெண் பாடசாலை விளையாட்டுப்போட்டி

வேம்படி மகளிருக்கு முதலிடம்

செல்விகள் மலைமகள் நடராசாவின் புதிய சாதனை

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாண பெண்கள் விளையாட்டுச் சங்கத்தால் யாழ். மாவட்ட பெண்கள் கல்லூரிகளிடையே, யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற விளையாட்டுப் போட்டியில், வேம்படி மகளிர் கல்லூரி கூடிய புள்ளிகளைப் பெற்று முதலிடத்தைத் தட்டிக்கொண்டது. இக் கல்லூரியின் மத்திய பிரிவு வீராங்கனை செல்வி மலைமகள் ரத்தினசிங்கம் இரு புதிய சாதனைகளை நிலைநாட்டி, இவ் விளையாட்டுப் போட்டியில் 'சிறந்த வீராங்கனை'க்கான வெள்ளிக் கிண்ணத்தையும், மத்திய பிரிவில் சிறந்த வீராங்கனைக்கான வெள்ளிக் கிண்ணத்தையும் தட்டிக் கொண்டார். இதே பிரிவில் சுண்டுக்குளி மகளிர் கல்லூரியைச் சேர்ந்த வீராங்கனை செல்வி எஸ். நடராசாவும் புதிய சாதனைகளை ஏற்படுத்தினார்.

இவ் விளையாட்டுப் போட்டிக்கு 'பாங்கொக்' நாட்டின் பாடசாலைகளின் கல்வி விளையாட்டு அதிகாரி திரு பி. ஈ. ராஜேந்திரா பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். இப் போட்டியில் வெற்றிபெற்ற வீராங்கனைகளுக்கு திருமதி ராஜேந்திரா பரிசில்களை வழங்கினார்.

இவ் விளையாட்டுப் போட்டியில் கூடிய புள்ளிகளைப் பெற்ற கல்லூரிகளின் நிலை பின்வருமாறு: 1-வது: வேம்படி மகளிர் கல்லூரி-249 புள்ளிகள், 2-வது: சுண்டுக்குளி மகளிர் கல்லூரி -167 1/2 புள்ளிகள், 3-வது: சுனகரட்ணம் மத்திய மகா வித்தியாலயம்-71 3/4 புள்ளிகள், 4-வது மெதடிஸ்த பெண்கள் பாடசாலை-61 புள்ளிகள், 5-வது: றிபேக் கல்லூரி-50 புள்ளிகள், 6-வது: நடேஸ்வராக் கல்லூரி 46 புள்ளிகள்.

இவ் விளையாட்டுப் போட்டியின் மற்றைய விபரங்கள் பின்வருமாறு:

கீழ்ப் பிரிவு

100 யார் ஓட்டம்: எஸ். சாமினி (சு பெ க), ஜெ. வினிதா (சு பெ க), ரி. சாந்தநாயகி (டி க)

150 யார் ஓட்டம்: எஸ். சாமினி சு பெ க), பி. ரேருகினி (வே ம க), பி. ஆனந்தி (சு பெ க)

80 மீற்றர் தடைதாண்டிப் பாய்தல்: என். ராஜன்தினி (வே ம க), எஸ். ரஞ்ஜினி (சு பெ க), கே. பரிமளராணி.

நீளம்பாய்தல்: எம். சாந்தினி (டி க), எஸ். சித்திரா (மா பெ க, எஸ். மேனகா (யூ க)

உயரம் பாய்தல்: எஸ். சத்தியபாமா (மெ பெ க) எஸ். கமலேஸ்வரி (உ இ க), ஏ. புனிதவதி (வே ம க)

75 யார் கயிறடித்தல்: பி. ஆனந்தி (சு பெ க), ஏ. புனிதவதி (வே ம க), என். சவுந்தரா (மெ பெ க)

4X100 அஞ்சல் ஓட்டம்: சுண்டிக்குளி பெண்கள் கல்லூரி (59 5 புதிய சாதனை), வேம்படி மகளிர் கல்லூரி, மெதடிஸ்ட் பெண்கள் கல்லூரி.

சிறந்த வீராங்கனை: எஸ். சாமினி (சு பெ க)

மத்திய பிரிவு

100 யார் ஓட்டம்: எஸ். நடராசா (சு பெ க), ரி. கிருஷ்ணவேணி (க ம ம வி), ஆர். சரோஜா (வே ம க)

150 யார் ஓட்டம்: எஸ். நடராசா (19 3 புதிய சாதனை சு பெ க), ரி. கிருஷ்ணவேணி (க ம ம வி), ஆர். சரோஜா (வே ம க)

80 மீற்றர் தடைதாண்டிப் பாய்தல்: ஆர். மலைமகள் (14·0 புதிய சாதனை), ரி. வாமி (வே ம க), ரி. பரமானந்தன் (சு பெ க)

நீளம் பாய்தல்: ஆர். மலைமகள் (16'' வே ம க), எஸ். நடராசா (15'5 1/2'' சு பெ க), ரி. கிருஷ்ணவேணி (15'5'' க ம ம வி) (மூவரதும் புதிய சாதனைகள்)

உயரம் பாய்தல்: ரி. வாமி, ஆர். மலைமகள் (வே ம க), கே. நடராசா (சு பெ க)

பரிதி வட்டம் வீசல்: கே. குமணபுஷ்பதேவி (வே ம க), எம் யோகரதி (வே ம க), பி. திருஞானசோதி (சு பெ க)

குண்டு எறிதல்: கே. குமணபுஷ்பதேவி (வே ம க), யோய் ஜெயறட்ன (உ ம க) எம். மனோராணி (க ம ம வி)

75 யார் கயிறடித்தல்: ரி. வாமி (வே ம க), ரி. பரமானந்தன் (சு பெ க), ஜி. ஜெயந்தா (வே ம க)

4X100 யார் அஞ்சல் ஓட்டம்: சுண்டுக்குளி பெண்கள் கல்லூரி (57·0 புதிய சாதனை), வேம்படி மகளிர் கல்லூரி, கனகரத்தினம் ம ம. வி.

மேற்பிரிவு

100 யார் ஓட்டம்: என். செல்வநிதி, டி. க.) ஆர். சின்னத்தம்பி (மெ. ம க) எம். சிவகுருநாதன் (வே ம க)

200 யார் ஓட்டம்: என். செல்வநிதி (டி க) ஆர். சின்னத்தம்பி (மெ ம க), எஸ். பாக்கியலக்ஷ்மி (க ம ம வி).

80 யார் தடை தாண்டி ஓட்டம்: எம். சிவகுரு (14.6 புதியசாதனை) வே ம க), எஸ். பாலுப்பிள்ளை (வே ம க), ஆர். பூலோகசுந்தரி (மெ ம க).

நீளம் பாய்தல்: பி. செல்வதுரை (ப ம க), எம். சிவகுருநாதன் (வே ம க).

உயரம் பாய்தல்: என். செல்வநிதி (டி க), வி. சுப்பிரமணியம் (மெ ம க), பி. நிர்மலாதேவி (மா ம க).

பரிதிவட்டம் வீசுதல்: எம். பெரியதம்பி (வே ம க), கே. சாரதாம்பிகை (மெ ம க), எஸ். கணேசன் (வே ம க).

குண்டு எறிதல்: எம். பெரியதம்தபி (வே ம க), எம். சந்திரா (ந க), எஸ். கணேசன் (வே ம க).

ஈட்டி எறிதல்: எம். சந்திரா (ந க), எஸ். கணேசன் (வே ம க), எஸ். அதிசயாம்பாள் (க ம ம வி).

4X110 அஞ்சல் ஓட்டம்: மெதடிஸ்ட் மகளிர்கல்லூரி, கனகரத்தினம் ம ம வி, சுண்டிக்குளி பெண் பாடசாலை. (தே. நி.)

நல்லூர் மூத்தவிநாயகர் நிலைய

ஆண்டுவிழாப் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், புதன்

நல்லூர் மூத்த விநாயகர் சனசமூக நிலைய 16-வது ஆண்டு விழாவைமுன்னிட்டு நடைபெற்ற விளையாட்டுப் போட்டி முடிவுகள் பின்வருமாறு:-

நீளம்பாய்தல் (மத்திய பிரிவு) இ. சதானந்தன், நா. புவனேந்திரன், சு. பஞ்சலிங்கம்,

நீளம்பாய்தல்(மேற்பிரிவு) இ. சரவணபவானந்தன், ந. ஜெகநாதன், சு. சோமலிங்கம்.

நீளம்பாய்தல் (அதிமேற்பிரிவு) சு. யோகேஸ்வரசர்மா, சி வெள்ளியம்பலம், ச. சச்சிதானந்தம்.

உயரம் பாய்தல் (கீழ்ப் பிரிவு) இ. கிருபானந்தன், கே. சிவகுமார், க. கிருபாகரன்.

உயரம்பாய்தல் (மத்திய பிரிவு) சி. இராஜகுமார், இ. சதானந்தன் நா. புவனேந்திரன்.

உயரம்பாய்தல் (மேற்பிரிவு) இ. சரவணபாவனந்தன், சு. சோமலிங்கம், ந. ஜெயநாதன்.

உயரம்பாய்தல் (அதிமேற்பிரிவு) சி. வெள்ளியம்பலம், பொ கணேசசுந்தரம், ச. சச்சிதானந்தம்.

100 யார் ஓட்டம் (கீழ்ப் பிரிவு) இ. கிருபானந்தன், ந. சுந்தரமூர்த்தி, க. கிருபாகரன்.

100 யார்ஓட்டம் (மத்திய பிரிவு) நா. புவனேந்திரன். இ. சதானந்தன், சு. பஞ்சலிங்கம்.

நெசவுப் போட்டி: திருநாவுக்கரசு சத்தியபாமா, சுப்பிரமணியஐயர் தேவகி அம்மாள், இராசையா நா. கேஸ்வரி.

எறிபந்தாட்டக் (கிரிக்கெட்) போட்டியில் வாலிபர்கள் வெற்றியீட்டினர்.

கரபந்தாட்டப் போட்டியில் சம்சாரிகள் வெற்றியீட்டினர். (கா. நி.)

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

புதன் 30—7—69

(செய்திகள் காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

344 மீ அன் 61 மீ

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவ நற்சிந்தனை, 6-40 இஸ்லாமிய நற்சிந்தனை, 7-15 துதிப்பாடல்கள், 7-30 திரைகானம், 8-00 செய்திச் சுருக்கம், 8-03 நிலையஒலிப்பதிவுகள், 8-15 இஸ்லாமியகீதங்கள், 8-30 செய்திச்சுருக்கம்.

344 மீ அன் 49 மீ

பகல் 12-00 செய்திச் சுருக்கம், 12-03 திரைகானம், 1-00 மாதர்கேட்டவை, 1-30 செய்திச்சுருக்கம்.

344 மீ அன் 61 மீ

மாலை 4-25 செய்திச்சுருக்கம், 4-28 கல்விஒலிபரப்பு, 5-00 செய்திச்சுருக்கம், 5-03 பிறந்த தினவாழ்த்துக்கள், 5-15 இளைஞர் மன்றம், 5-45 படத்திலிருந்து.

இரவு 6-15 பாமாலை, 6-30 கிராம சஞ்சிகை, 7-00 செய்திச்சுருக்கம், 7-03 வேல்விழா அஞ்சல், 8-00 செய்திச்சுருக்கம், 8-03 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-15 இடைவேளைஇசை, 10-00 நேயர் கேட்டவை, 10-30 செய்திச் சுருக்கம்.

சியவச 'மரதன்' ஓட்டம்

பூநகரி, செவ்வாய்

பூநகரிப் பகுதியிலுள்ள ஏழு பாடசாலைகளிலும் கல்விமந்திரியின் உத்தரவுப்படி சியவச மரதன் ஓட்டம் ஆரம்பிக்கப் பட்டு பிரதான வீதிகள் வழியாக ஓட்ட வீரர்கள் வந்து பூநகரி மகா வித்தியாலயத்தை அடைந்தனர். அங்கு ஒரு கூட்டம் பாடசாலை அதிபர் திரு. ரீ. தியாகராசா தலைமையில் நடைபெற்றது. அதிபர் கல்விமந்திரியின் ஆசிச் செய்தியை மாணவர்களுக்கு வாசித்துக் காட்டினர்.

திட்டமிடப்பட்ட குடும்பம் அவசியமா?

உலகில் பரவிவரும் சனத்தொகைக்கு உணவு, கல்வி, வேலை என்பன கிடைக்காமல் அவதிப்படுகின்றோம். நமது நாடு இருபது வயதுக்கும் அறுபது வயதுக்கும் இடைப்பட்டோரது உழைப்பிலேயே தங்கி இருக்கின்றது. சிறுவர்களின் தேவைக்கும் முதியோர்களின் செலவினங்கட்கும் பெருமளவு பணம் தேவைப்படுகின்றது.

இந்தியா போன்ற நாடுகளில் பலஎதிர்ப்புகளுக்கிடையில் குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டம் உருவாகிச் சனத் தொகை அதிகரிப்பு குறைக்கப்பட்டு வருகின்றது ஆனால் நமது நாட்டு ஆஸ்பத்திரிகளில் நிமிஷத்துக்கு நிமிஷம் குவா, குவா சத்தம் கேட்டுக்கொண்டே இருக்

நமது நாட்டிலும் குடும்பக் கட்டுப்பாட்டுத்திட்டம் செயல்பட்டு வந்தாலும், அதனை எல்லோரும் ஏற்றுக் கொள்வதில்லை. ஏன் எல்லாவற்றிலும் முந்திரிக்கொட்டைபோல் இருக்கும் ஆஸ்திகர்கள் கடவுள் மேல் பழியைப் போட்டுவிடுவார்கள். மற்றவர்களையும் பாவம், தவறு என்று சொல்லித் தழம்பப் பண்ணுவார்கள். அறிவற்ற ஏழைமக்கள் அரசாங்கம் செய்யும் இலவச ஆப்பரேஷனையோ கருத்தடை வில்லைகளையோ பயன்படுத்துவதில்லை. இதனால் இவர்களின் குடும்ப வாழ்வு பெரிதும் தவலைக்கிடமானது ஏன் பன்றிக் குட்டிபோல பலபிள்ளைகளிலும் பார்க்க சிங்கக்குட்டிபோல் ஒரு

கிளை விலகியது

திருகோணமலை, செவ்

அகில இலங்கை ஸ்தல ஸ்தாபன தொழிலாளர் சங்கத்தில் கடந்த 10 ஆண்டுகளாக அங்கம் வகித்து வந்த திருக்கோணமலை ஸ்தல ஸ்தாபனத் தொழிலாளர் சங்கக் கிளை தாய்ச் சங்கத்திலிருந்து விலகிக்கொண்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அசலான பானம் அருந்துங்கள்

திருகோணமலை, செல்வி அகில இலங்கை ஸ்தல ஸ்தாபன தொழிலாளர் சங்கத்தில் கடந்த 10 ஆண்டுகளாக அங்கம் வகித்து வந்த திருக்கோணமலை ஸ்தல ஸ்தாபனத் தொழிலாளர் சங்கக் கிளை தாய்ச் சங்கத்திலிருந்து விலகிக் கொண்டது.

REGAL JAFFNA
Daily 4 Shows
Osmar Sharif &
Francoise Dorleac
in
GENGHIS KHAN
(Panavision/Technicolor)

ராணி
(யாழ்ப்பாணம்)
[தினசரி 3 காட்சிகள்]

ஜெமினி — சாவித்திரி
கிரிஜா
நடித்த

இரு சகோதரிகள்
(புதிய கொப்பி)

வின்ஸர்
(யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்

ஜெமினி கணேசன்
சரோஜாதேவி
நடித்த

தாமரை நெஞ்சம்

கெப்பிட்டல் (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) விஜயா (மட்டுநகர்)
வெலிங்டன் (யாழ்ப்பாணம்) ராஜ் (நீர்கொழும்பு) ஸ்ரீகிருஷ்ணா (திருமலை)
2-30, 6-30, 9-30



எம். ஜி. ஆர்.
★
ஜெயலலிதா

மனேஜர், அசோகன், விஜயகுமாரி, சோ, மனோரமா, கண்ணன்
நடித்த

கனவன்

இசை: எம். எஸ். விஸ்வநாதன்
டைரக்ஷன் ப. நீலகண்டன்

திருமணம் அல்லது பிறந்தநாள் போன்ற விசேட தினங்களில் பல தொடர்புகளுக்கு இடையில் குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டம் உருவாகிச் சனத் தொகை அதிகரிப்பு குறைக்கப்பட்டு வருகின்றது ஆனால் நமது நாட்டு ஆங்கில பத்திரிகைகளில் நிமிஷத்துக்கு நிமிஷம் குவா, குவா சத்தம் கேட்டுக்கொண்டே இருக்கின்றது என்று தமாஷாகப் பேசிக்கொள்கிறார்கள். இன்னும் மரண வீதமும் குறைந்துள்ளது. இவ்வாறு பெருக்கல் விருத்தியில் வளர்ந்து வரும் சமூகத்துக்கு கூட்டல் விருத்தியில் உற்பத்தியாகும் உணவுப் பொருள் பற்றாமல் இருக்கின்றது.

ஆப்பரேஷனோ கருத்தடை வில்லைகளோ பயன்படுத்துவதில்லை. இதனால் இவர்களின் குடும்ப வாழ்வு பெரிதும் கவலைக்கிடமானது ஏன் பன்றிக் குட்டிபோல் பலபிள்ளைகளிலும் பார்க்க ஒங்கக்குட்டிபோல் ஒரு பிள்ளையால் அக்குடும்பம் சிறக்காதா? இன்னும் குஞ்சரம் ஒரு கன்றை ஈன்று பெருமையடையவில்லையா?

ச. சாரதா
கோப்பாய் வடக்கு,
கோப்பாய்

'ஈழநாடு' கடிதப் போட்டி—(4)

வாசக நேயர்கள் தங்கள் அபிப்பிராயங்களையும் யோசனைகளையும் வெளிப்படுத்துவதற்காக நாம் ஏற்படுத்திய இந்தப் போட்டிக்கு வாராவாரம் கடிதங்கள் அதிகரித்துக்கொண்டு வருகின்றன.

பரிசுக் கடிதம்

போட்டிக் குழு தெரிவு செய்த பரிசுக்குரிய கடிதம்மேலே பிரசுரமாகிறது. இதை எழுதியவர்: ச. சாரதா, கோப்பாய் வடக்கு கோப்பாய்.

பாராட்டுக்குரிய மற்ற கடிதங்கள் 'ஈழநாடு' தினப்பதிப்பில் தொடர்ந்து வெளியாகும்.

அடுத்த போட்டி

தற்சமயம், முக்கியமாக இலங்கையிலும், பொதுவாக உலகத்திலும் நிலவுகின்ற ஏதாவதொரு பிரச்னை பற்றி 150 வார்த்தைகளுக்கு மேற்படாத ஒரு கடிதத்தை எமக்கு எழுதுங்கள்.

நிபந்தனைகள்

கடிதத்துடன் கீழ்தரப்படும் கூப்பனையும் கத்தரித்து எடுத்து அதில் உங்கள் பெயரையும் விலாசத்தையும் தெளிவாக எழுதி சேர்த்து அனுப்ப வேண்டும். அனுப்பும் விலாசம் **கடிதப்போட்டி (4) 'ஈழநாடு' த. பெ. இலக்கம் 49, யாழ்ப்பாணம்.** கடிதங்களை நேரடியாக ஈழநாடு காரியாலயத்திலும் சமர்ப்பிக்கலாம். எத்தனை கடிதங்களையும் ஒருவர் ஒரே தபால் உறையில் அனுப்பலாம். ஆனால் ஒவ்வொன்றுடும் ஒரு கூப்பன் சேர்க்கப்படவேண்டும். 'ஈழநாடு' ஊழியர்களும் அவர்கள் குடும்பத்தினரும் இப்போட்டியில் கலந்து கொள்ள முடியாது. எல்லா விஷயங்களிலும் போட்டிக் குழுவின் தீர்ப்பே முடிவானது. சிறந்த கடிதத்துக்கு ரூபா மூன்று பரிசு வழங்கப்படும். பாராட்டுக்குரியவை 'ஈழநாடு' தினப்பதிப்பில் தொடர்ந்து வெளியிடப்படும். கடிதங்கள் 2-8-69 க்கு முன் எமக்கு வந்து சேரவேண்டும்.

'ஈழநாடு'
கடிதப் போட்டி(4)

பெயர் .....

விலாசம்: .....

.....

அசலான பானம் அருந்துங்கள்
யானை மார்க் பானம் அருந்துங்கள்

உங்கள் வீட்டுக்கு வரும் விருந்தாளிகளுக்கு யானை மார்க் பானங்களை வழங்கி உபசரிக்கும் போது அவர்களின் ருசித்திறமையைப் பாராட்டுகிறார்கள், ஏனெனில் யானை மார்க் பானங்கள், மற்றப் பானங்களைவிடத் தூய்மையும், ருசியும் வாய்ந்து, அதிக தெம்பூட்டுமென்று அவர்கள் அறிந்திருப்பதாக நீங்கள் உணர்த்துகிறீர்கள். அது அசைக்க முடியாத உண்மைதான், ஏனெனில் தரமான பானத்தயாரிப்பில் 75 வருடங்களுக்கும் அதிக அனுபவமுள்ள எலிபன்ட் ஹவுஸ், ஒவ்வொரு இலங்கையின் ருசிக்கும் ஏற்ற பலரக சுவைப் பானங்களை விருத்தி செய்கிறது.

CCS

யானைமார்க் பானங்கள் நீங்கள் தேர்ந்தெடுக்கும் எந்த மதுபானத்திலும் கலந்து பருகச் சிறந்தவை. ருசிமிகுந்த மற்ற மதுபானப் பிரியர்கள், தங்கள் விஸ்கியில் கலந்து சுவைக்க, எப்போதும் யானை மார்க் சோடாவைத் தேர்ந்தெடுக்கிறார்கள். அதே போல, ஜின்னில் கலப்பதற்கு மிகப்பொருத்தமானது யானை மார்க் டானிக், யானை மார்க் ஜிஞ்சர் ஏல் பிறண்டிக்கு அற்புதமாக ஒத்துப்போகும். யானை மார்க் ஜிஞ்சர் பியர், லங்கா லீம் அல்லது சோடா, உங்கள் சாராயத்திற் கலந்து பருக உகந்தவை என்பது பிரசித்தம், டரவசமூட்டும் புதிய பானக்கலவை வேண்டும் போது, யானைமார்க் பிட்டர் லெமன் அல்லது யானை மார்க் லைகா ஒரேஞ் கலந்து சுவைத்தால், உங்கள் மதுபானம் அபார ருசியுடையதாக மாறிவிடும்.

சிலோன் கோல்ட் ஸ்டோர்ஸ் லிமிட்டெட்
எலிபன்ட் ஹவுஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போர்த்துக்கல் தாக்குதல் குறித்து ஐ. நா. பாதுகாப்புச்சபை கண்டனம்

வாஷிங்டன், ஜூலை 29

சாம்பியா நகர் ஒன்றின்மீது போர்த்துக்கல் தாக்குதல் நடத்தியதைக் கண்டிக்கும் தீர்மானம் ஒன்றை ஐ. நா. பாதுகாப்புச் சபை நிறைவேற்றியிருக்கின்றது.

இந்தத் தீர்மானத்தை, போர்த்துக்கல் அரசாங்கம் நிராகரித்துவிட்டது.

சாம்பியா நாட்டின் ஒரு நகர்மீது போர்த்துக்கல் தாக்குதல் நடத்தியதாகச் சாம்பியா பாதுகாப்புச்சபையில் புகார் ஒன்றைத் தாக்கல்செய்திருந்தது. இந்தச் சம்பவத்தைக் கண்டிக்கும் தீர்மானம் ஒன்றும் சபையில் தாக்கல்செய்யப்பட்டது. இந்தத் தீர்மானத்தை ஆதரித்து பதினொரு நாடுகள் வாக்களித்தன. அமெரிக்கா, பிரிட்டன், ஸ்பெயின் போன்ற நாடுகள் வாக்கெடுப்பில் கலந்துகொள்ளவில்லை.

இம்மாதிரி நடவடிக்கைகளில் போர்த்துக்கல் தொடர்ந்து இறங்கினால் தீவிர நடவடிக்கைகள் எடுக்கவேண்டியேற்படலாம் என்றும் போர்த்துக்கல் எச்சரிக்கப்பட்டுள்ளது.

மொஸாம்பிக் நாட்டுக்கு அருகாமையில் சாம்பியாவின் நகர் ஒன்றின்மீது போர்த்துக்கல் அண்மையில் தாக்குதல் நடத்தியதாகச் சபையில் புகார் தெரிவிக்கப்பட்டிருந்தது. இந்தத் தாக்குதலின்போது கைது செய்யப்பட்ட சாம்பியா நாட்டவர்களைத் திருப்பி அனுப்பும்படியும் போர்த்துக்கல்லைப் பாதுகாப்புச் சபை வற்புறுத்தியிருக்கின்றது.

உகண்டாவுக்கு பாப்பரசர் விஜயம்

நைஜீரிய உள்நாட்டுப் போரை நிறுத்திவைக்க ஒஜுக்கு யோசனை

லேகோஸ், ஜூலை 29

போப்பாண்டவர் வருகையை யொட்டி நைஜீரியாவில் இடம் பெற்றுவரும் உள்நாட்டுப் போரை நிறுத்திவைக்க வேண்டும் என்று கேணல் ஒஜுக்கு யோசனை தெரிவித்திருக்கின்றார்.

சமஷ்டி நைஜீரியாவுக்கும் பிரிந்துபோன பியாப்ராவுக்குமிடையில் நடைபெற்றுவரும் உள்நாட்டுக் கலகங்களை, போப்பாண்டவரின் விஜயத்தின்போது நிறுத்தி வைக்கவேண்டும் என்று பியாப்ரா தலைவர் கேணல் ஒஜுக்குத் தெரிவித்துள்ள இந்த யோசனைக்கு நைஜீரியத் தரப்பில் இன்னும் பதில் கிடைத்திருப்பதாக தெரியவில்லை. சமஷ்டி நைஜீரியத் தரப்பினரும் இந்த யோசனையை ஏற்றுக் கொள்ளக்கூடுமென்று எதிர்பார்க்கப்படுகின்றது.

போப்பாண்டவர் இந்த வாரத்தில் உகண்டாவுக்கு மூன்றுநாள்விஜயமொன்றை மேற்கொள்ள இருக்கின்றார். அப்பொழுது அவர் எல்லா ஆபிரிக்க நாடுகளிலுமிருந்து வரும் பிரதிநிதிகளைச் சந்திப்பார். சமஷ்டி நைஜீரியாவிலிருந்து மூன்று பேர்கொண்ட ஒரு தூதுகோஷ்டியும் பியாப்ராவிலிருந்து மூன்று பேர்கொண்ட ஒரு தூதுகோஷ்டியும் போப்பாண்டவரைச் சந்திக்கும்.

பியாப்ராவுக்கு அனைத்துலக செஞ்சிலுவைச் சங்கத்தின் உதவிகளைத் தொடர்ந்து செய்யும்படியும் பியாப்ரா தலைவர் கேணல் ஒஜுக்கு கோரிக்கை விடுத்திருக்கிறார்.

பாகிஸ்தானில் முறையான தேர்தல் நடத்தப்படுமாம்

ஜெனரல் யாஹ்யாகான் அறிவிப்பு

ராவல்பிண்டி, ஜூலை 29

பாகிஸ்தானில் முறையான தேர்தல்கள் நடைபெறுவதற்கு வசதிசெய்யும் வகையில இப்பொழுதுள்ள தேர்தல் சட்டங்களைத் திருத்தி அமைக்க தேர்தல் கமிஷன் ...

பாகிஸ்தானில் பொதுத் துறையிலிருந்து தெரிவு செய்யப்பட்ட பிரமுகர்களைக் கொண்ட மந்திரிசபையொன்றை நிறுவுவதற்கும் தாம் முடிவு செய்திருப்பதாக அதிபர் யாஹ்யா அறி...

யாஹ்யாகானுக்கு எழுதிய கடிதத்திற்கு அவர் இப்பொழுது பதில் அனுப்பியிருக்கின்றார்.

பாகிஸ்தானுக்கும் பாரதத்துக்குமிடையிலிருந்து வரும் பிணக்குகளைத் தீர்த்...

"ஆசிரியர்களை தெய்வமாக மதிக்கவேண்டும்"

யாழ்ப்பாணம், புதன்

"சந்திரனை மனிதன் வெற்றி கொள்வதற்கு, அவன், வீரம், துணிவு மட்டுமன்றி அவன் அறிவு வளர்ச்சியும், அவனுக்கு உதவியது. அறிவு வளர்ச்சி உடையவன் உலகில் மேலும் பல சாதனைகளை ஏற்படுத்தலாம். அவ்வறிவு வளர்ச்சிக்கு முக்கியமாக உதவி அளிப்பவர் ஆசிரியர்களாவர். இந்த ஆசிரியர் குலத்தை நாம் தெய்வமாக மதிக்க வேண்டும்."

இவ்வாறு, நாவற்குழி மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற, கல்வி நூற்றாண்டு விழாக் கொண்டாட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய நாவற்குழி கிராம சபைத் தலைவர் திரு. சோ. சடாட்சரம் கூறினார்.

வித்தியாலய அதிபர் திரு. இ. கந்தையா வித்தியாலய கொடியை ஏற்றித் தலைமை உரை நிகழ்த்தினார்.

மற்றும் உப அதிபர் திரு. அ. யோசப், ஆரம்ப வகுப்புகளின் தலைமை ஆசிரியர் திரு இராசேந்திரம் ஆகியோரும் பேசினர்.

விழா இறுதியில் சங்கீத ஆசிரியை திருமதி கமலம் மகாலிங்கம் மேற்பார்வையில் சங்கீதம் மற்றும் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன.

புதியதேர்தல் நடாத்துக

அளவெட்டி, திங்கள்

காங்கேசன்துறைப் பட்டின சபை எல்லைக்குள் உள்ள ஊறணி கிராமத்துக்கு தனிவட்டாரம் அமைத்தபின் பட்டினசபை புதிய தேர்தலை நடாத்துமாறு உள்ளூராட்சி அமைச்சரை கேட்டுக்கொள்ளும் தீர்மானமொன்று காங்கேசன்துறை பட்டின சபை மாதாந்தக்கூட்டத்தில் நிறைவேறியது.

தலைவர் ஆ. வ. சதாசிவம் தலைமையில் நடைபெற்ற ...

விவசாயத்தில் புதிய முறை

அளவெட்டி, செவ்வாய்

அளவெட்டி கந்தரோடை பகுதிகளுக்கு விஜயம்செய்த உதவி விவசாய அதிகாரி அங்குள்ள வயல்களில் வைத்து நெல்விளைச்சலை அதிகரிக்கச் செய்யும் ஒரு புதிய முறை பற்றி விவசாயிகளுக்கு விளக்கம் கொடுத்தார்.

யாழ். மாவட்டத்தில் நெல் உற்பத்தியை பெருக்கவும் குறைந்தநாளில் நல்ல விளைவைப்பெறவும் வகுத்த திட்டம் ஒன்றை வடமாகாண உதவி விவசாய அதிகாரி திரு. எம். என். மாணிக்கவாசகர் வடபகுதியில் சகல இடங்களுக்கும் சென்று புதுமுறை பற்றி விளக்கம்கொடுத்தார். அப்போது அளவெட்டி, கந்தரோடை பகுதிகளுக்கும் விஜயம் செய்தார்.

இவர் வரி நெல் திட்டத்தை விவசாயிகளுக்கு விளங்கப்படுத்துவதற்காக பீப்பா விதைக்கும் கருவியால் எப்படி வரி, வரியாக நெல்லை விதைப்பது என்பது பற்றி விளக்கம் கொடுத்து வருகிறார்.

இவர் தமது விளக்கத்தின் போது தெரிவித்ததாவது:

ஒருவன் ஓர் ஏக்கருக்கு நெல் விதைக்க தேவையான செலவிலும்பார்க்க இப்புதிய முறையில் மிகக்குறைவான செலவுதான் ஏற்படும். இன்று நீர் இல்லை என்பதால் நெல் நாற்று நடுவதில்லை. இந்தப் புதிய முறை கருவியால் 9 அங்குல இடைவெளியில நெல விளைவிக்க முடியும் இப்படியானால்களைபிடுங்குவதும் சுலபமாக இருக்கும். களைபிடுங்கப்பாவிக்கும் கருவியால மிகவிரைவில களைகளை அகற்றிவிடலாம் என்றார்.

"விவசாயத்திலாவது நாம் முன்னேறுவோம்"

அளவெட்டி; செவ்வாய்

"விஞ்ஞான வர்ச்சியால் விண்வெளியில் சென்று சந்திரனில் நடமாட மேலை நாடுகள் முன்னேறியுள்ளது போல நாமும் முதலில் விவசாயத்திலாவது முன்னேறி நம்மைக் காப்பாற்றுவது மட்டுமல்லாமல் சுயதேவையைப் பூர்த்தி செய்வோம்".

இவ்வாறு வலிவடக்கு காரியாதிகாரி திரு. பி. எல். பற்றிக் தெல்லிப்பளை கோவில்புலம் பாரதிசன சமூக நிலையத்தினரால் நடத்தப்பட்ட சுகாதார விழாவில் பேசுகையில் கூறினார்.

தெல்லிப்பழை கிராம சபைத் தலைவர் திரு. எம். இரம்பரநாதன் தலைமையில் சுகாதார விழா மேற்படி சனசமூக நிலையத்தில் நடைபெற்றது.

சிரியர் திரு. வைத்தீஸ்வரன், விவசாய பரிசோத திரு. லிங்கதாசன், தெல்லிப்பளைக் கிராமசேவையாளர் திரு. கனகசபை பாரதி சனசமூக நிலையத் தலைவர் திரு. க. கதிரவேல ஆகியோரும் உரையாற்றினர்.

11,59003 புசல்நெல்

திருக்கோணமலை, செவ்

அரசாங்க நெற்சட்டத்தின் கீழ் திருக்கோணமலை மாவட்டத்தில் இம்மாதம் 16-ம் திகதி வரை 11,59003 புசல் நெல் பெறபட்டுள்ளன

பருத்தித்துறை கடலுக்கு இளைஞன் பலி

வல்வெட்டித்துறை, செவ்வாய்

பருத்தித்துறைக்கடலுக்கு நீச்சல் பழகுவதற்குச் சென்ற பருத்தித்துறையைச் சேர்ந்த 18 வயது இளைஞனான தங்கராசா இராஜேஸ்வரன் என்பவர் கடலுக்குப் பலியானார்.

நேற்று முன்தினம் காலையில் நீந்திக் கொண்டிருக்கும்போது போது அவரால்தொடர்ந்து நீந்த முடியாது போகவே அவர் திரும்பவும் கரையை நோக்கி நீந்திச்செல்ல முயன்றதாகவும் அதற்குள் அவரை கடல் பலிகொண்டு விட்டதாகவும் விசாரணையின்போது தெரியவந்தது.

இதுபற்றி பொலிசாருக்கு தகவல் கிடைத்தவுடன் பருத்தித்துறைப் பொலிஸ் சார்ஜண்ட் நவரத்தினமும், பொலிஸ் கான்ஸ்டபிள்களான கந்தையா, பெரேரா ஆகியோரும் ஸ்தலத்துக்கு விரைந்தனர்.

இறந்தவரதுசடலம் பருத்தித்துறை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டு, விசாரணையின் பின்னர் உறவினரிடம் ஒப்படைக்கப்பட்டது

உப ஜனாதிபதி தேர்தல்

புதுடில்லி, ஜூலை 28

உபஜனாதிபதி தேர்தல் சம்பந்தமான தேதிகளை தேர்தல் கமிஷன் அறிவித்தது

வேட்பு மனுக்கள் தாக்கல் செய்ய கடைசி தேதி ஆகஸ்டு 9, பரிசீலனை ஆகஸ்டு 11, வாபஸ் வாங்க கடைசி தேதி ஆகஸ்டு 14, போட்டியிருந்தால் வாக்குப்பதிவு ஆகஸ்டு 30.

உபஜனாதிபதி பதவிக்கு கட்சி வேட்பாளரை முடிவு செய்ய காங்கிரஸ் மத்திய ஆட்சிமன்ற போர்டு அடுத்த வாரம் டில்லியில் சந்திக்கக்கூடும்.

நந்தா, பாடக், வயலட் ஆல்வா ஆகியோரின் பெயர்கள் இது விஷயமாக அடிபடுகின்றன.

அடுத்த வாரம் காங்கிரஸ் அக்கிராசனர் நிஜலிங்கப்பா இங்கு வந்தவுடன் கட்சித் தலைவர்கள் இடையே ஆலோசனை நடக்கும்.

உப ஜனாதிபதி தேர்தலுக்கு பொது வேட்பாளரை முடிவு செய்ய எதிர்க்கட்சிகள் ஒத்துழைக்காதிருக்கக்கூடும்.

ஆட்சி மெம்பர்கள் மட்டுமே இத் தேர்தலில் வாக்களிக்க உரிமை பெற்றவர்கள். ஆகவேதான் வேட்பாளர் வெற்றி பெறுவார் என பார்லிமெண்ட் காங்கிரஸ் கட்சி நம்புகிறது.

டாக்டர் முதலியார் விலகுவார்

சென்னை, ஜூலை 29

சென்னை பல்கலைக் கழக துணை வேந்தர் பதவியிலிருந்து டாக்டர் ஏ. எல். முதலியார் ஆகஸ்ட் முதல் தேதி விலகுவார் என்று தெரிகிறது.

பல்கலைக் கழக பகுதியில் அவர் ஒரு விருந்து நடத்தினார். அதில் பல்வேறு ... லூரிகளின் முதல்வர்களும் பேராசிரியர்களும், சிண்டிகேட் அங்கத்தினர்களும் கலந்து கொண்டனர்.

கல்வித்துறையில் பல ஆண்டுகளாக டாக்டர் முதலியார் செய்த சேவையைப் பாராட்டி பலர் பேசினர்.

பாராட்டுக்கு நன்றி தெரிவித்து டாக்டர் முதலியார் பேசுகையில், ஆகஸ்ட் முதல் தேதி பதவியிலிருந்து விலகப் போவதாகக் கூறினார்.

டாக்டர் முதலியாருக்கு அடுத்த படியாக துணை வேந்தராக நியமிக்க கவர்னருக்கு 3 பெயர்களை சிபார்சு செய்ய பிரதம நீதிபதி வீராசாமி தலைமையில் 3 நபர்குழு ஏற்கனவே நியமிக்கப் பட்டுள்ளது.

பிரியாவிடை

சுழிபுரம் செவ்வாய்

மூளாய் கூட்டுறவு வைத்தியசாலையில் நீண்ட காலமாக வைத்தியராகப் பணியாற்றி ஓய்வுபெற்ற திரு. எஸ். செல்லத்துரைக்கு வைத்தியசாலை நிர்வாகிகள், பொது மக்கள், ஊழியர்கள் யாவராலும் ஒரு பிரிவுபசாரம் வைத்தியசாலையில் வைத்து அளிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ராவல்பிண்டி, ஜூலை 29

பாகிஸ்தானில் முறையான தேர்தல்கள் நடைபெறுவதற்கு வசதிசெய்யும் வகையில இப்பொழுதுள்ள தேர்தல் சட்டங்களைத் திருத்தி அமைக்க தேர்தல் கமிஷன் ஒன்றை ஜெனரல் யாஹ்யாகான் நியமித்திருக்கிறார்,

நேற்று பாகிஸ்தான் மக்களுக்கு ரேடியோ மூலம் உரைநிகழ்த்திய ஜெனரல் யாஹ்யாகான், அரசியல் கட்சிகள் தமது காரியக்கமிட்டிகள் தமது காரியக் கமிட்டிகளின் கூட்டங்களை நடத்துவதற்கு அனுமதிக்கப்படுவார்கள் என்றும் ஆனால் ஊர்வலங்களுக்கும், பொதுக் கூட்டங்களுக்கும் இருந்து வரும் தடைகள் தொடர்தும் அமுல்நடத்தப்படும் என்றும் கூறினார்.

ஜனநாயக முறைப்படி தேர்தல் நடைபெறுவதற்கு வழிசெய்யப்படும், ஆனால் அதற்கு முன் அதற்கான சூழ்நிலை உருவாக்கப்பட வேண்டுமென்றார் ஜெனரல யாஹ்யாகான்.

பாகிஸ்தானில் பொதுத் துறையிலிருந்து தெரிவு செய்யப்பட்ட பிரமுகர்களைக் கொண்ட மந்திரிசபையொன்றை நிறுவுவதற்கும் தாம் முடிவு செய்திருப்பதாக அதிபர் யாஹ்யா அறிவித்தார். இந்த மந்திரிகள் அடுந்துவரும் தேர்தல்களில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படமாட்டார்கள் என்றும் அவர் குறிப்பிட்டார்.

கிழக்குப் பாகிஸ்தான் மக்களுக்கு குறைபாடுகள் இருந்துவருவதை அவர் ஒப்புக்கொண்டார். தேசிய ரீதியில் அவர்களுக்களிக்கப்படும் பங்கு போதாதென்று [illegible]றிப்பிட்டார். ராணுவத்தில் கிழக்கு பாகிஸ்தானிலிருந்து சேர்த்துக்கொள்ளப்படுகிறவர்களின் எண்ணிக்கை இரட்டிப்பாக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

இந்திராவுக்கு கடிதம்

திருமதி இந்திராகாந்தி அண்மையில ஜெனரல் யாஹ்யாகானுக்கு எழுதிய கடிதத்திற்கு அவர் இப்பொழுது பதில் அனுப்பியிருக்கின்றார்.

பாகிஸ்தானுக்கும் பாரதத்துக்கு மிடையிலிருந்து வரும் பிணக்குகளைத் தீர்த்துக்கொள்ளும்வகையில் இரு நாடுகளும் பங்குபற்றக் கூடிய ஒரு கூட்டு அமைப்பை ஏற்படுத்தலாம் என்று திருமதி காந்தி தமது கடிதத்தில் யோசனை தெரிவித்திருந்தார். இருநாடுகளும் போர்தவிர்ப்பு ஒப்பந்தம் ஒன்றை செய்துகொள்ள வேண்டும் என்ற தமது முன்னைய யோசனையையும் அவர் நினைவுறுத்தியிருந்தார்.

இந்தக் கடிதத்திற்கு அதிபர் யாஹ்யாகான் அனுப்பியுள்ள பதிலில் இரு நாடுகளுக்குமிடையிலான அடிப்படைத் தகராறுகளைத் தீர்த்துக்கொள்ள பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்க வேண்டியதுபற்றி குறிப்பிட்டிருக்கின்றார்.

தி. மு. கழகத்தின் எதிரிகள் ஏமாந்து போனார்களாம்

செயலாளர் தேர்தல்பற்றி கருணாநிதி கருத்து

சென்னை, ஜூலை, 29

தமிழ்நாடு தி. மு. க. பொதுத்தேர்தல்கள் மிகவும் அமைதியாக நடைபெற்று முடிந்துள்ளன.

கழகத்தில் பிளவு ஏற்பட்டுவிடும் என்று எதிர்பார்த்தவர்கள் ஏமாற்றமடைந்திருப்பதாக தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு. கருணாநிதி கருத்து வெளியிட்டிருக்கிறார்.

நீர் இடித்து நீர் விலகாது என்று கிராமங்களில் ஒரு பழமொழி உண்டு. அது போல் நான் இடித்து நெடுஞ்செழியன் விலகவில்லை. நெடுஞ்செழியன் இடித்து நான் விலகவில்லையென்று திரு. கருணாநிதி குறிப்பிட்டுள்ளார்.

தேர்தல் விபரம் பின்வருமாறு:-

கட்சியின் தலைவராக இது வரை பொருளாளராக இருந்துவந்தவரும், தமிழக முதலமைச்சருமான மு. கருணாநிதி தேர்ந்தெடுக்கப்பட்டார். இப்பதவி (கட்சித் [illegible]வர் என்ற ஒரு பதவி) [illegible]விட முன்னேற்றக் கழ[illegible]ன்றியது முதல் இருந்ததில்லை. இப்பொழுது இந்தத் தேர்தலிலிருந்து புதிதாக இப்பதவியைக் கட்சியின் சட்டதிட்டங்களில் தகுந்த மாற்றங்கள் செய்து ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

பொதுச் செயலாளராக முன்னாள் அமைச்சரான இரா. நெடுஞ்செழியன் தேர்ந்தெடுக்கப்பட்டார். கட்சியின் பொருளாளர் பதவிக்கு சினிமா நடிகர் எம். ஜி. ராமச்சந்திரன் தேர்ந்தெடுக்கப்பட்டார். இந்த மூன்று தேர்தல்களும் ஏகமனதாக நடைபெற்றன.

மயிலாப்பூர் ஏ. வி. எம். ராஜேஸ்வரி கல்யாண மண்டபத்தில் தி. மு. கழகத்தின் புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள பொதுக்குழு உறுப்பினர்கள் கூட்டமும், கழக நிர்வாகிகள் தேர்தலும் நடைபெற்றன.

தணிக்கைக் குழு

அடுத்துக் கட்சியின் தணிக்கைக் குழுவிற்குத் தேர்தல் நடந்தது. இதற்குள்ள மொத்த இடங்கள் மூன்று. ஆரம்பத்தில் 9 பேர்கள் போட்டி போட்டார்கள். தேர்தலுக்குப் பிறகு கீழ்க் கண்ட வரிசையில் மூன்று பேர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

1. ஏ வி. பி. ஆசைத் தம்பி
2. ராம அரங்கண்ணல்
3. டி. கே. பொன்னுவேலு

முதல் இரண்டு பேரும் தற்போதைய சட்டசபை உறுப்பினர்.

ஆட்சி மன்றக் குழு

அடுத்து 6 பேர் கொண்ட ஆட்சிமன்றக் குழுவிற்கு (பார்லிமெண்டரி போர்டு) வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. முதலில் இதற்கு 22 பேர்கள் போட்டியிட்டார்கள். இதில் நான்கு அமைச்சர்கள் போட்டியிட்டார்கள்.

ஆட்சிமன்றக் குழுவிற்குத் தேர்ந்தெடுக்கப் பட்டவர்கள் விபரம்:- (தேர்ந்தெடுக்கப்பட்ட வரிசைக் கிரமப்படி)

1. மந்திரி சாதிக் பாட்சா
2. க. அன்பழகன் எம். பி.
3. எஸ். மதுரை முத்து எம். எல். சி.
4. அமைச்சர் சே. ஏ. மதியழகன், 5. அன்பில் தர்மலிங்கம், 6. அமைச்சர் மா. முத்துச்சாமி.

சுகாதார அமைச்சர் சத்தியவாணிமுத்து ஆட்சி மன்றக்குழு உறுப்பினர் பதவிக்குப் போட்டியிட்ட நான்கு அமைச்சர்களில் ஒருவர்.

ஆனால் அவர் தேர்ந்தெடுக்கப்படவில்லை.

நெடுஞ்செழியன் ஏற்கனவே தி. மு. க. அவைத் தலைவராக இருந்தவர். அவர் கட்சியின் பொதுச் செயலாளராகவும் இருந்திருக்கிறார். அவர் முக்கியமான பணிகள், கொள்கை சம்பந்தப்பட்ட முடிவுகள், அனைத்தையும் தலைவருடன் கலந்து நிறைவேற்றுவார்.

அண்ணா சமாதியில்

பொதுக் குழுக் கூட்டமும் பொதுச் செயலாளர் தேர்தலும் முடிந்த பிறகு தலைவர் மு. கருணாநிதி, பொதுச் செயலாளர் நெடுஞ்செழியன், பொருளாளர் எம். ஜி. ராமச்சந்திரன், அமைப்புச் செயலாளர் என். வி. நடராஜன், சென்னை மாவட்டச் செயலாளர் நீல நாராயணன் ஆகியோர் மெரினாகடற்கரைக்குச் சென்று அண்ணாதுரை சமாதிக்கு அஞ்சலி செலுத்தி விட்டு வந்தார்கள்.

ஆசியா அழகி

மணிலா, ஜூலை 29

தென் கொரியாவைச் சேந்த ஸு என்ற பெண் நேற்றிரவு ஆசிய 1969-ம் ஆண்டு அழகியாகதேர்ந்தெடுக்கப்பட்டார் .அழகிகள் போட்டியில 14 பெண்கள் கலந்துகொண்டனர்.

[illegible]மாறு உள்ளூராட்சி அமைச்சரை கேட்டுக்கொள்ளும் தீர்மானமொன்று காங்கேசன்துறை பட்டின சபை மாதாந்தக்கூட்டத்தில் நிறைவேறியது.

தலைவர். ஆ. வ. சதாசிவம் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் 6-ம் வட்டார உறுப்பினர் பி. இம்மானுவேலால் பிரேரிக்கப்பட்டு 5-வட்டார உறுப்பினர் ச. சிவனடியாரால் அனுமதிக்கப்பட்ட இத் தீர்மானம் தெரிவிப்பதாவது:

ஆறு வட்டாரங்களைக் கொண்ட காங்கேசன்துறைப் பட்டின சபையின் கிறிஸ்தவ சமூகத்தை சேர்ந்தவர்களுக்கு ஓர் தனி வட்டாரம் வேண்டுமென்று உள்ளூராட்சி அமைச்சரை கேட்டுக் கொண்ட சமயம் அவர் இதற்கு சம்மதம் அளித்ததன் பிரகாரம் இம்முறை ஊறணியை தனிவட்டாரமாக்கிய பின் தேர்தலைநடத்துக.

[illegible]நிடத்திப்பட்ட சுகாதார விழாவில் பேசுகையில் கூறினார்.

தெல்லிப்பழை கிராம சபைத் தலைவர் திரு. எம். சிதம்பரநாதன் தலைமையில் சுகாதார விழா மேற்படி சனசமூக நிலைய திறந்தவெளியரங்கில் நடைபெற்றது.

திரு. பற்றிக் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

சுகாதாரம் இன்றியமையாத சாசனம். அதை நாம் பின்பற்றவேண்டும். இதை பின்பற்றியதால் தான் எமது மூதாதையர் சுகமாக வாழ்ந்தார்கள். சுகாதாரத்தைப் பேணினால் தான் திடமான மணிதனாக வாழ்வதுடன் விவசாயத் துறையையும் முன்னேற்றலாம்.''

யாழ் மாவட்ட வைத்திய அதிகாரி திரு. காங்கேசு பேசுகையில் கூறியதாவது: இங்குள்ள மக்கள் சுகாதாரமாக வாழவேண்டும் என்பதற்காக சுகாதார வசதிகள் கொண்ட எத்னையோ நடவடிக்கைகளை நாம் எடுத்துவருகிறோம். இதன் முதற்படியாக தெல்லிப்பழையில் ஒரு ஆஸ்பத்திரி கட்டப்படுகிறது. இது மிக விரைவில் திறக்கப்படஇருக்கிறது. அத்துடன் மக்கள் மலேரியா என்னும் கொடியநோயால் பாதிக்கப்பட்டுள்ளதை அறிந்து மலேரியாத் தடுப்பு இயக்கத்தையும் ஆரம்பித்துள்ளோம்.

மல்லாகம் கிராமசபைத தலைவர் திரு. வ. பொன்னம்பலம் பேசுகையில், ''ஒரு நாட்டின் சுகாதாரம் அந்நாட்டின் வருமானத்தில் தான் தங்கியுள்ளது. போஷாக்குள்ள உணவு, வெளிச்சமுள்ள வீடு சுத்தமான நீர், மலசலகூட வசதிகள் இவற்றைத் தரதகுந்த தனிவருமானம் வேண்டும். அலலது சமூகமே இவற்றைத் தரவலல வேறு அமைப்பை உருவாக்கவேண்டும். எமது பண்டைய நாகரீகத்தின் பெருமைகளை எலலாம் தராசின் ஒரு தட்டில வைத்து மறுதட்டில மலசலகூடத்திற்குப் பொருந்தும் பளிங்குக் கோப்பையை போட்டுப்பார்த்தால சமமாக இருக்கவேண்டும். நவீன சுகாதாரவசதிகள் இலலாமல ஓர் இனத்தின் பண்பாட்டைக் காண்பது முடியாத காரியம்'' என்றார்.

தெலலிப்பழை பகுதி சுகாதாரஅதிகாரி திரு. நா. செலலப்பா, மலலாகம் இந்துக்கலலூரி உயற்பயிற்சி ஆசிரியர் திரு. த. தம்பித்துரை, சுசுாதார போதனா

16-ம் திகதி வரை 11,59003 புசல் நெல் பெறபட்டுள்ளன

பாளர் வெற்றி பெறுவார் என பார்லிமெண்ட் காங்கிரஸ் கட்சி நம்புகிறது.

[illegible]ரம் வைத்தியசாலையில் வைத்து அளிக்கப்பட்டது.

டேவிட் பிரவுண் ட்ராக்டர்கள் சிறந்தவை என்பதற்கு பிரதான 7 காரணங்கள்

உண்மையில் டேவிட் பிரவுண் ட்ராக்டர் சிறந்தது உங்கள் வேலைகளுக்குகந்தது என்பதற்குப் பல காரணங்களிருப்பினும், நாங்கள் 7 சிறப்பான விஷேச அம்சங்களை மட்டும் கூறுகிறோம். மேலும் நீங்கள் எம்முடன் தொடர்பு கொண்டாலோ அல்லது நேரில் வருகை தந்தாலோ நாங்கள் அதன் மிகச் சிறந்த பலாபலன்களை உங்களுக்கு மகிழ்சியுடன் தெரிவிக்கக் காத்திருக்கிறோம்.

- இன்று துரிதமாக விற்பனையாகும் ட்ராக்டர்.
- உங்கள் தேர்வுக்கு 36-46-55-72 குதிரைச் சக்தி கொண்ட 4 வித ட்ராக்டர்கள்.
- பலவிதமான இணைப்புக்கருவிகளும் கையிருப்பிலுண்டு.
- உதிரிப்பாகங்கள் உடனடியாகக் கிடைக்கின்றன.
- இயக்குவதற்கு மிக வசதியான ட்ராக்டர்.
- ரோலண்ட்ஸ் ஸ்தாபனத்தின் உத்தரவாதம் கொண்டது
- இலங்கை முழுவதிலும் பாவனைக்குப் பின் கிடைக்கும் சேவை வசதிகளுக்கு உத்தரவாதம்.



HOUSE OF R ROWLANDS

ரோலண்ட்ஸ் (ட்ராக்டர்ஸ்) லிமிட்டெட்

103, [illegible] கொழும்பு 7.

DB

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிவாக்கு

'சமுகத்தோடு ஒட்டி வாழும் தன்மையை உடையவன் மனிதன். தனிமனிதன் சாதனைகள் பிறருக்கு உபயோகப் படவேண்டுமானால், போதுமான அளவு சாமத்தியமுள்ள வேறு எந்த மனிதனுக்கும் சாத்தியமானவைகளாக அவை இருக்க வேண்டும்.'

— மகாத்மாகாந்தி.

ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna.
Post Box: 49, Jaffna. Telephone: 389.

யாழ்ப்பாணம், சௌமிய வருஷம் ஆடி மாதம் 15-ந்திகதி (30-7-69)

கூட்டுறவில் பெண்கள்

கூட்டுறவு இயக்கம் ஆண்களுக்கு மட்டும் உரிய ஒரு சொத்து அல்ல வென்றும், பெண்களும் முன்வந்து இதில் பங்கு கொண்டு கூட்டுறவு இயக்கம் சிறந்த முறையில் செயற்படவும் நாடு முன்னேறவும் உழைக்க வேண்டுமென்றும் மூதூர் முதல் பிரதிநிதி கூட்டுறவாளர்நிலைக் கூட்டமொன்றில் பேசுகையில் தெரிவித்த யோசனை பெண்களின் கண்களை திறக்க உதவவேண்டும்.

பலதுறைகளிலும் பெண்கள் ஈடுபட்டு ''தொட்டதெல்லாம் பொன்னாக'' விளங்கச் செய்துவருகின்றார்கள். அரசாங்க சேவையானாலும் அரசியலானாலும் தனியார்துறையானாலும் பெண்கள் தங்கள் உழைப்பின் மூலம் முன்னேற்றம் ஏற்படுத்தியுள்ளனர். இந்த நாட்டில் மட்டுமல்ல வெளிநாடுகள் பலவற்றிலும் பெண்களின் உழைப்பும் அறிவும் ஆற்றலும் அந்தநாடுகளின் முன்னேற்றத்துக்குப் பெரிதும் உதவியிருக்கின்றன, இஸ்ரேல்நாட்டின் முன்னேற்றத்துக்கும் அந்த நாடு எதையும் எதிர்த்துச் சமாளிக்கக் கூடிய துணிச்சலுடனிருப்பதற்கும் அந்த நாட்டுப் பெண்களே பெரிதும் காரணமாவர். இஸ்ரேலின் முன்னேற்றத்துக்கு அங்கு கூட்டுறவு இயக்கம் பெரிதும் வளர்ச்சியடைந்திருப்பது முக்கிய காரணம். கூட்டுறவு இயக்கத்தின் வளர்ச்சி காரணமாக மக்கள் மத்தியில் கூட்டுறவு மனப்பான்மை வளர்ச்சியடையவும் சுயநல மனப்பான்மை நீங்கவும் வழிபிறக்கிறது இஸ்ரேலில் கூட்டுறவு இயக்கம் வளர்ச்சியடைவதற்கு பெண்கள் அதில் தீவிரமாகப் பங்கு கொண்டிருப்பதும் மற்றொரு முக்கிய காரணம்.

நமது நாட்டில் கூட்டுறவு இயக்கம் சிறப்புற வளர்ச்சியடைந்திருந்தாலும் சமீப காலத்தில் அங்கு ஊழலும் மோசடியும் மலிந்து விட்டதாகப் பொதுவாகப் புகார் கூறப்படுகிறது. கூட்டுறவுச் சங்கங்கள், சம்மேளனங்கள் பல நல்ல முறையிலும் நேர்மையாகவும் நிர்வகிக்கப்பட்டுப் பொது மக்களுக்குச் சேவை செய்து வருகின்றன என்பது உண்மையே. சில சங்கங்களிலும் சம்மேளனங்களிலும் ஒரு சிலர் செய்யும் தவறு கூட்டுறவு இயக்கத்தின் நற்பெயருக்கும் நல்ல சேவைக்கும் இழுக்குத் தேடிவிடுகின்றன. இந்தக் கூட்டுறவுச் சங்கங்கள், சம்மேளனங்களில் பெண்களும் பங்கு கொண்டு உழைத்தால் ஊழல்களும் மோசடிகளும் பெருமளவு குறையவும், சிக்கனமாகவும் சிறந்த முறையிலும் நிர்வாகம் நடைபெறவும் ஒரு தூண்டுதலாக இருக்கும்.

மேற்கு ஆசியப் பிரச்னை

மேற்கு ஆசியாவில் சூயஸ்கால்வாய்ப் பகுதியில் இஸ்ரேலியருக்கும் ஐக்கிய அரபுக்குடியரசுப் படைகளுக்குமிடையில் சென்ற சில தினங்களாக மீண்டும் நடைபெற்று வரும்துப்பாக்கிச்சண்டை பற்றி வல்லரசுகள் இனியும் கைகட்டிக்கொண்டு பார்த்திருக்கமுடியாது. இத்துப்பாக்கிச் சண்டையில் ஐ, நா. பார்வையாளர் ... பானவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கவேண்டியது அவசியம்.

இஸ்ரேலுக்கும், அரபு நாடுகளுக்கும் ஆயுத உதவி அளித்து பின்னணியில் ஆதரவுகொடுத்துவருவது வல்லரசுகள்தான். இந்த வல்லரசுகள் ஆயுதங்கள் வழங்குவதை நிறுத்திக் கொண்டாலே மேற்குஆசியப் பிரச்னைக்குத் தீர்வு கிடைத்துவிடும்.

செனட்டர் சு. நடராசா உரை (4)

'நாட்டைப் பிரிக்கும் நோக்கத்தோடு பிரதேச சபைகளைக் கேட்கவில்லை''

''நாம் பிரதேசசபைகளைக் கேட்கும் நேரத்தில் இலங்கைவாழ் மக்கள் ஒற்றுமையாக வாழவேண்டுமென்ற நோக்கத்தோடு கேட்கின்றோமே யொழிய நாட்டைப் பிரிக்கும் நோக்கத்தோடு கேட்கவில்லை'' என்று கூறுகிறார் தமிழரசுக்கட்சியைச் சேர்ந்த செனட்டர் சு. நடராசா, செனட்சபையில் சிம்மாசனப் பிரசங்கத்துக்கு நன்றி தெரிவிக்கும் பிரேரணைக்குத் திருத்தப் பிரேரணை கொண்டுவந்து அவர் ஆற்றிய உரையின் நான்காம் பகுதி இங்கு பிரசுரமாகிறது

கௌரவ டட்லி சேனநாயக்க அவர்கள் ஏன் தான் சொன்ன நிலையிலிருந்து விலகினார்! ஏன் தான் கூறியவாக்குறுதியைக் காப்பாற்றவில்லை? இந்தநிலையை நாம் சற்று ஆராய்ந்து பார்ப்போம். அந்த நேரத்திலே யூ. எல். எவ். என்று கூட்டுச் சேர்ந்த கட்சியினர்-சமசமாஜிகள், கம்யூனிஸ்ட்டுக்கள் அத்தனை பேரும்-டாக்டர் என். எம். பெரேரா அவர்களும் நூற்றுக்கு நூறு மாவட்ட சபைகளை ஆதரிக்கிறோம் என்று சொல்லி வந்தார்கள். ஆனால், கடைசியாக ஏற்பட்ட நிலை என்னவென்றால், வகுப்புவாதக் குழுவினர், இனத்தைத் துவேஷிக்கின்றவர்களின் குரல்களுக்குஅமைவாகதாம் அதைக் காப்பாற்ற முடியாதென்ற நிலைக்கு வந்துவிட்டார்கள் என்ன பரிதாபமான நிலை! இந்த மாதிரியான ஒப்பந்தம் கனவான்களுடைய ஒப்பந்தம் அரசாங்க மொன்றை நடாத்துவதற்கு அத்திவாரமாகும். கூட்டணியில் சேரலாம்; பிரியலாம். ஆனால் காரணத்தைக் காட்டிப் பிரியவேண்டும் எஸ் எல். எப். பி. கட்சியினர் இந்தமாவட்ட சபைக்கு ஆதரவு கொடுத்தார்கள். எல் எஸ். எஸ். பி. கட்சியினர் இந்தத்திட்டத்துக்கு ஆதரவு கொடுத்தார்கள். கம்யூனிஸ்ட் கட்சியினர் இந்தத் திட்டத்துக்கு ஆதரவு கொடுத்தார்கள். யூ. என். பி. கட்சியினர் அதனைக் கொடுப்பதாகச் சொன்னார்கள். ஆனால் எந்தக் கட்சி ஆதிக்கத்தில் இருக்கின்றதோ அந்தக் கட்சிக்கு எதிராக மற்றக் கட்சிகள் சேர்ந்து 'அதைக் கொடுக்கவேண்டாம்' என்று சொல்லும் நிலைமை இருந்து வருகிறது. 1956-ம் ஆண்டு தொடக்கம் இந்த நிலை ஏற்பட்டு வருகின்றது. அதுமட்டுமல்ல. நாம் இதை அலசி ஆராய்ந்து பார்த்தால், ஒரு நேரத்தில்சொல்கிறார்கள், தமிழ் மக்களுக்குள் ஒற்றுமையில்லை, ஏகோபித்தகுரலில்லை என்று ஒரு காலத்திலும் நூற்றுக்கு நூறு ஏகோபித்த கோரிக்கையைநாம்காண முடியாது. ஆனால், திருவாளர் பொன்னம்பலம் அவர்கள் யாழ்ப்பாணத்தில் 1960-ஆம் ஆண்டு போட்டியிட்டுத்...

விவாதத்தில் பேசும்போது அவர் சொன்னார்.

''மாவட்ட சபைகள் நிறுவுவதற்கான உத்தேச மசோதாவை உருவாக்குமாறு அரசாங்கம் ஆட்சிமன்ற காரியதரிசிக்கு உத்தரவிடும்பொழுது மதிப்புக்குரிய காரியதரிசி இந்த உத்தேச மசோதாவை எவ்வளவு விரைவில் செய்து முடிக்க முடியுமோ அவ்வளவு விரைவில் உருவாக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்ளுகிறேன் இந்நாட்டின் குடியேற்ற நாடுகளுக்குரிய நிர்வாகத்தின் முக்கியத்துவம் இம்மாவட்ட சபைகளால் நீக்குவதுமட்டுமன்றி இதனால் இந்நாட்டு சிறுபான்மையினரின் எண்ணற்ற பிரச்சினைகளுக்குத் தீர்வு காண இயலும் என்ற காரணத்தினாலேயே நான் இவ்வுத்தேசமசோதாவை விரைவாக உருவாக்குமாறு கேட்டுள்ளேன்''

ஆகையால் காலத்துக்குக் காலம் அங்கத்தவர்கள் இவ்வித கருத்துக்களைக் கூறியிருக்கின்றனர். இன்று திருவாளர் சிவசிதம்பரம் அவர்கள் திருவாளர் பொன்னம்பலத்தின் தலைமையில் இருப்பதனால் ஒருசமயம் இதனை எதிர்ப்பார். ஆனால் அவர் தீர்க்கதரிசனத்துடன்சொன்

"கலை, கலாச்சாரத்தை வளர்க்க தமிழ்பல்கலைக்கழகம் வேண்டும்''

னது, இப்படிப்பட்ட மாவட்ட சபைகள் இந்த நாட்டுக்கு உகந்ததென்று. ஆதலால், மக்கள் மத்தியில் அரசாளும் உரிமையைப் பெற்று பாராளுமன்றத்தில் இருப்பவர்கள் நாட்டு மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதியைப் பேணி நடக்க வேண்டும். விகிதாசாரப்படி தமிழ்மக்களின் எத்தனை...

மென்ற நோக்கத்தோடு கேட்கின்றோமே யொழிய நாட்டைப் பிரிக்கும் நோக்கத்தோடு கேட்கவில்லை. பிரிப்பது என்று சொன்னால் இன்றும் இலங்கைத் தீவு, யாழ்ப்பாண மாவட்டம், மன்னார் மாவட்டம், வவனியா மாவட்டம் என்று ஒவ்வொரு மாவட்டங்களாகப்பிரிக்கப்பட்டுத்தான் நிருவாகம் நடைபெற்றுக் கொண்டு வருகிறது. அந்நியர் ஆட்சியின் அமைப்புக்குக்கீழே, சுதந்திரம் பெற்ற தன்னரசு ஆட்சி நடக்கின்றனவோ அந்த மாதிரியாக நடைமுறையைத்தான் நாம் கேட்கிறோம் என்று சொல்ல வேண்டியிருக்கிறது.

சட்டப் பிரமாணங்கள்

அடுத்ததாக 1966 ஆம் ஆண்டு சொன்ன வாக்குறுதியின்படி சமர்ப்பிக்கப்பட்ட-எத்தனையோ கஷ்டங்களுக்கிடையில் நிறைவேற்றப்பட்ட-தமிழ் மொழிவிசேடசரத்து விதிகள் சில இன்னமும் அமுலுக்குக் கொண்டு வரப்படவில்லையென்ற குற்றச்சாட்டை இந்த அரசாங்கத்தின் மீது சமர்ப்பிக்கின்றேன். அந்தச் சட்டத்திற்கமைவாக இவ்வரசாங்கம் ஏற்ற நடவடிக்கைகளை எடுக்கவில்லை. ஒரு சட்டத்தை அமுலுக்குக கொண்டுவராவிட்டால் அந்தச் சட்டத்தைக் கொண்டுவந்ததில் ஒருவிதமான பலனுமில்லை. அதுமட்டுமல்ல; பாஷை விடயத்தில், பொதுச்சேவையிலுள்ள சிங்கள மக்கள் தமிழ்ப் பாஷையையும் தமிழ் மக்கள் சிங்களப் பாஷையையும் படிக்க வேண்டுமென்ற கோரிக்கையை யூ. என். பீ. கட்சியினர் ஏற்றனர். அவர்களு...

களும் சேர்ந்து தமிழ் மக்களுக்கு ஒரு தனிச் சர்வகலாசாலை வேண்டுமென்று கோரினார்கள். அதை நாம் ஆதரித்தோம். அதற்காக திருமலையில் காணியைப் பெற்று அதை ஸ்தாபிக்க முயன்றோம்.

கடந்த கால விடயங்களை விட்டுவிடுவோம். 1965-ம் ஆண்டு, தேர்தலுக்குப் பின்னர் தேசிய அரசாங்கம் பதவி ஏற்றதும், தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக விருக்கின்றவர்களில் மூன்று பிரதிநிதிகள் தவிர்ந்த மற்றைய எல்லோரும்- தமிழ், முஸ்லிம்கள் என்ற பாகுபாடு, பிரிவு இல்லாமல்- ஒருமித்த ஒரு முகமாக நின்று திருமலையில் தமிழ்ச்சர்வகலாசாலை ஒன்று வேண்டுமென்று பிரதமஅமைச்சரவர்களுக்கு மனுவொன்றைச் சமர்ப்பித்தோம். எனினும் ஏன் சர்வகலாசாலை இது வரை ஸ்தாபிக்கப்படவில்லையென்று கேட்கிறோம்? அதைப்பற்றிய பேச்சு ஏன் எழவில்லை?

இன்று நாட்டின் கல்வி பிரிக்கப்பட்டிருக்கின்றது. சிங்களப் பிள்ளைகள் சிங்கள மொழி மூலமும் தமிழ்ப் பிள்ளைகள் தமிழ்மொழி மூலமும் கல்வி கற்பதே அரசாங்கத்தின் கல்வித் திட்டமாகும். ஆகையால் தமிழ்ப் பிள்ளைகளுக்கு ஒரு தனிச் சர்வகலாசாலை வேண்டுமென்பதை ஒருவரும் மறுக்க முடியாது. கௌரவ டட்லி சேனநாயக்க அவர்களும் அதனை மறுக்கவில்லை. ஆனால், இருபது, இருபத்தொரு தமிழ் பேசும் அங்கத்தவர்களில் மூன்று அங்கத்தவர்கள் மாத்திரம் தவிர்ந்து நிற்க மற்றவர்களின்கோரிக்கையை ஏன் செவிசாய்க்கவில்லையென்பதை நான் பகிரங்கமாகக் கேட்கிறேன்.

பல்கலைக்கழகம்

1959-ம்ஆண்டு மே மாதம் 10-ம் திகதி திருமலையில் தமிழ்ச் சர்வகலாசாலைக்கு அத்திவாரம் இடப்பட்டது. அந்த நேரத்தில்சகலதமிழ்ப்...

ஐயாறன் எழுதுவது

ஒரு கதை. பகவான் சத்ய சாயி பாபா கூறியது. கேளுங்கள்.

ஓர் ஊரிலே ஒரு பெரிய வர்த்தகர் இருந்தார். செல்வந்தர். தெய்வ பக்தியுள்ளவர். அவருக்கு ஒரே மகள். அம்மகளை ஒழுக்கசீலமுள்ள நல்ல பக்தனுக்கு விவாகம் செய்விக்கத் தீர்மானித்தார்.

பக்தனை எங்கே தேடுவது? கோவில்கள், வழிபடு ஸ்தலங்கள் எல்லாவற்றுக்கும் சென்று பார்த்தார். ஒரு கோவிலில் பூசையாகி எல்லோரும் சென்றபின், ஒரு வாலிபர் அங்கிருந்து தனிமையில் வழிபட்டுக் கொண்டிருந்தார் வர்த்தகர் அவரை அணுகி ''உமக்கு விவாகம் ஆகிவிட்டதா?'' என்று விசாரித்தார்

''ஐயா, நானோ ஓர் ஏழை. ஓட்டைக் குடிசையில் தான் வசிக்கிறேன். எனக்கு யார் பெண் தருவார்கள்? மேலும் எனக்கு ஆத்மீக வாழ்வில் உதவக் கூடிய பெண்ணைத் தான் விவாகம் செய்துகொள்வதென்று தீர்மானித்திருக்கிறேன்'' என்றார். ஒழுக்க சீலமும் அன்புமுள்ள அவ்வாலிபருக்கே தன் மகளை விவாகம் செய்துதரத் தீர்மானித்தார். மகளும் தன் தந்தை சொல் மிக்க மந்திரமில்லை என்று கருதி, அவர் கூறிய எளிய வாலிபனையே மணந்தார்.

மணமாகி, தன் புருஷனின் குடிசைக்குச் சென்று அந்தக் குடிசையை எல்லாம் ஒழுங்குபடுத்திக் கொண்டிருக்கையில், ஒரு பானைக்குள்ளாக ஒரு ரொட்டித் துண்டு இருந்தது அதைப் பற்றி விசாரிக்கவே, ''நாளைக்குச் சாப்பிட ஒன்றும் கிடைக்காவிட்டால், நாம் பசியாறுவதற்காக அதைப் பத்திரப்படுத்தி வைத்திருக்கிறேன்'' என்றான் கணவன்.

இதைக் கேட்டதும், மனைவிக்கு மிக மனவேதனை ஏற்பட்டது. ''நாளை உணவுகள் கடவுள் கொடுக்கமாட்டாரா? இன்றே அதைச் சேமித்துவைக்கவேண்டுமா? அப்படிக் கொடுக்காவிட்டாலும் அதுவும் இறைவன் இஷ்டம் என்று கூறி மனநிம்மதியாக இருக்கவேண்டாமா? நாளை உணவுக்காக இன்றே வைத்துள்ளதிலிருந்து உமக்குத் தெய்வத்திடம் பூரண நம்பிக்கை இல்லையென்றே தெரிகிறது. ஒன்று, அந்த ரொட்டி இந்த வீட்டிலிருந்து வெளியேறவேண்டும். அல்லது...

தாய்மாரும் மற்றவர்களும் பக்தியுடன் தொடர்ந்து பாடியது மறக்கமுடியாத அபூர்வக்காட்சியும் அனுபவமுமாகும்.

0 0 0

சாதாரண சிறிய கோவில் என்று நினைக்கிறோம். ஆனால் அதிலும் எவ்வளவு மகிமையுள்ளதென்பதை நெருங்கி அறியும்போது வியப்பளிக்கின்றது, காரைநகர் அரசடிக்காடு கதிர்வேலாயுத சுவாமி கோவிலை உபய கதிர்காமம் என்கின்றனர். எங்கும் கண்டிராதபடி பெரியதோர் வேல் அங்கு தேரில் பவனி வருகிறது. பின்புறம் சிவலிங்க வடிவத்திலுள்ள பெட்டகத்துக்குள்ளாகப் பெரியோர் பூஜித்த புனித யந்திரம் இருக்கின்றது.

(2-ம் கலம் பார்க்க)

இன்றைய பலன்

மேஷம்- எண்ணம்போல் வாழ்வு இன்று மலரும். மற்றவர்கள் மெச்சும் வண்ணம் கடமையாற்றுவீர்கள். இதயத்துக்கு இதமளிக்கக்கூடிய பரிசும் கிடைக்கலாம். வேண்டியவர்களின் ஆதரவும் பெருகும்.

ரிஷபம்- அறவழிகளை மனம் நாடும். வேதனை கொடுத்த சம்பவமொன்று இன்று சமரசமாகத் தீர்க்கப்படலாம். சுற்றுவட்டாரத்தில் மதிப்பு உயரும் பயன்தரும் பிரயாணமொன்றும் ஏற்படலாம்.

மிதுனம்- இதயம் எரிமலையாகும். எதிரிகள் தாக்குவர். ஏமாற்றத்துக்கு இடமுண்டு. எனினும் இருள் சூழ்ந்த நிலையிலும் ஒளிக்கோடுகள் தென்படலாம். அதிக பேச்சைத்தவிர்த்து காரியத்தில் கண் வைக்கவும்.

கடகம்- தாம்பத்திய வாழ்வில் மகிழ்ச்சிகரமான சம்பவங்கள் இடம் பெறும். களஸ்திரவழியால் பொருள் வரவுக்கு இடமுண்டு. கண்ணியமான நடவடிக்கைகளில் ஈடுபடுவீர்கள். புதிய நண்பர்கள் சேருவார்கள்.

சிம்மம்- போட்டி விவகாரங்களில் பணம் விரயமாகும். ஆணவப் போக்கினால் சந்தர்ப்பம் நழுவவிடப்படலாம். எதிரிகள் மறைமுகத் தாக்குதல் நடத்துவர். மேலிடத்து அபிப்பிராய பேதத்துக்கும் இடமேற்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்ற சில தினங்களாக மீண்டும் நடைபெற்று வரும்துப்பாக்கிச்சண்டை பற்றி வல்லரசுகள் இனியும் கைகட்டிக்கொண்டு பார்த்திருக்கமுடியாது. இத்துப்பாக்கிச் சண்டையில் ஐ. நா. பார்வையாளர் குழுவைச்சேர்ந்தஅதிகாரியொருவரும் கொல்லப்பட்டிருக்கிறார். இந்தச் சண்டை பற்றி இனியும் ஐ. நா.வும் கூடசும்மா இருக்கமுடியாது.

இஸ்ரேலுக்கும் அரபு நாடுகளுக்குமிடையிலான பகைமையும் அடிக்கடி நடைபெற்றுவரும் சண்டைகளும் பற்றிய சரித்திரமும் காரணங்களும் பற்றி நாம் இதற்கு முன் இப்பத்தியில் பல தடவைகளிலும் எடுத்துக்கூறியிருக்கிறோம்.

இஸ்ரேல் அரபுப் பிரச்னைக்கு சுமுகமான நிரந்தரமான தீர்வுகாண்பதற்கான முயற்சியாக ஐ. நா. வில் நான்கு வல்லரசுகளின் பிரதிநிதிகளுக்கிடையில் நடைபெற்று வந்த பேச்சுவார்த்தைகளிலும் உரிய பயன்எதுவும் கிடைக்கவில்லை. இரண்டு வருடங்களுக்கு முன் நடந்த ஆறுநாள் யுத்தத்தை நிறுத்துவதில் ஓரளவு வெற்றியீட்டிய ஐ. நா. ஸ்தாபனம் இஸ்ரேல்கைப்பற்றிய அரபுப் பிரதேசங்களிலிருந்து இஸ்ரேலை வெளியேற்றவோ, இஸ்ரேலை அரபுநாடுகள் அங்கீகரித்து இஸ்ரேலுக்கும் அரபு நாடுகளுக்குமிடையில் நேரடிப்பேச்சு நடைபெறவழிகாணவோ முடியவில்லை. சண்டையைநிறுத்தச் செய்வதில் வெற்றியீட்டும் ஐ. நா. ஸ்தாபனம் சண்டையை நிரந்தரமாக நிறுத்தவும் பகைமையை மறந்து நல்லுறவை ஏற்படுத்தவும் வழிகாணும் நிலையில்இல்லை. இடையிடையே ஏற்படும் மோதலைத் தடுப்பதற்குக்கூட அதற்குச் சக்திஇல்லை போர் ஓய்வு என்பது, இரு பகுதியினரும் மற்றொரு போருக்குத் தங்களைத் தயார்செய்துகொள்வதற்கான அவகாசமாகவே அமைந்துவிடுகிறது. இது கடமையைச் செய்வதற்காக அங்கு அனுப்பிவைக்கப்படும் ஐ. நா. அதிகாரிகளின் உயிரைப் பலிவாங்கவும் ஏற்பட்டுவிடுகிறது.

யார் வீசிய குண்டாக இருந்தாலும் ஐ நா. அதிகாரி ஒருவர் உயிரைப் பலிகொண்டாலும் அந்தக் குண்டுக்குப் பொறுப்

அளித்து [illegible] ஆதரவுகொடுத்துவருவது வல்லரசுகள்தான். இந்த வல்லரசுகள் ஆயுதங்கள் வழங்குவதை நிறுத்திக் கொண்டாலே மேற்குஆசியப் பிரச்னைக்குத் தீர்வு கிடைத்துவிடும்.

நியமனங்கள்

பருத்தித்துறை, செவ். மட்டுவில் மகாவித்தியாலய அதிபர் திரு. கே. நடராசா இளைப்பாறியதைத் தொடர்ந்து, தொண்டமாறு மகாவித்தியாலய அதிபர் திரு. வி. நடராசா மட்டுவில் மகாவித்தியாலய அதிபராக நியமிக்கப்படவிருப்பதாகவும் நெல்லியடி மத்திய மகாவித்தியாலய சிரேட்ட ஆசிரியருள் ஒருவரான திரு. இ. வல்லிபுரம் தொண்டமாறு மகா வித்தியாலய அதிபராக நியமிக்கப்பட விருப்பதாகவும் தெரிகிறது.

அநேகமாக இந்நியமனங்கள் புரட்டாதி மாத ஆரம்பத்தில் நடக்கலாமென எதிர்பார்க்கப் படுகிறது. செங்குந்தா இந்துக் கல்லூரி விஞ்ஞான ஆசிரியர் திரு. எஸ், கந்தையா நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்திற்கு இடமாற்றஞ் செய்யப்பட்டுள்ளார். நெல்லியடி மத்திய மகா வித்தியாலய ஆசிரியர் திரு. கே, இராசசேகரம் புலோலி மெதடிஸ்தமிஷன் பாடசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

(8-ம் கலத் தொடர்ச்சி)

அதற்கும் அபிஷேக ஆராதனைகள் பக்திசிரத்தையுடன் நடப்பதைக் கண்டேன். ஒரு பெரியார் அந்த யந்திரத்தை எடுத்துக் கொண்டு கதிர்காமத்தில் வைக்கச் சென்றபோது காரைநகரிலேயே வைத்துக் கோயில்செய்யுமாறு உத்தரவு கிடைக்கவே அவ்விதமே செய்தாராம். இக்கோவில் திருப்பணிக்கான ஏற்பாடுகள் நடைபெற்றுவருகின்றன.

0 0 0

அன்றே என்றன் ஆவியும் உடலும் உடமையெல்லாமுங் குன்றே அனையாய் என்னை ஆட்கொண்டபோதே கொண்டிலையோ, இன்றோர் இடையூறு எனக்குண்டோ எண்தோள் முக்கண் எம்மானே, நன்றே செய்வாய் பிழை செய்வாய் நானோ இதற்கு நாயகனே.

—மணிவாசகம்.

ஏகோபித்தகுரலில்லை என்று ஒரு காலத்திலும் நூற்றுக்கு நூறு ஏகோபித்த கோரிக்கையைநாம்காணமுடியாது. ஆனால், திருவாளர் பொன்னம்பலம் அவர்கள் யாழ்ப்பாணத்தில் 1960-ஆம் ஆண்டு போட்டியிட்டுத் தோல்வியுற்ற நேரத்தில் உடுப்பிட்டிப் பிரதிநிதி திருவாளர் சிவசிதம்பரம் அவர்கள் பாராளுமன்றத்தில் தமிழ்க் காங்கிரஸின் ஒரேயொரு பிரதிநிதியாகஇருந்த காலத்தில் அவர் கூறியதை நான் வாசித்துக்காட்ட வேண்டும். 1964 ஆம் ஆண்டு வரவுசெலவுத்திட்ட

லால், மக்கள் மத்தியில் அரசாளும் உரிமையைப் பெற்று பாராளுமன்றத்தில் இருப்பவர்கள் நாட்டு மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதியைப் பேணி நடக்க வேண்டும். விகிதாசாரப்படி தமிழ்மக்களின் எத்தனை பிரதிநிதிகள் இதனைக் கேட்கின்றார்கள் என்றே பார்க்க வேண்டும். ஆக தமிழ் மக்களின் மூன்று பிரதிநிதிகள் மட்டுமே இதனை எதிர்த்திருக்கிறார்கள்.

ஆதலால், நாம் பிரதேச சபைகளைக் கேட்கும் நேரத்தில் இலங்கை வாழ் மக்கள் ஒற்றுமையாக வாழவேண்டு

இன்று வைரவிழா

சுன்னாகம் மயிலணி சைவவித்தியாசாலை

யாழ்ப்பாணத்தின் கண்ணுள்ள பல்வேறு பகுதிகளில் பல்வகைச் சிறப்புகளோடு கூடிய கிராமம் வலிகாமம் வடக்கிலுள்ள சுன்னாகமாகும் வடமொழி, தென்மொழிகளிற் புலமை படைத்த பல வித்துவான்கள், பண்டிதர்கள், இங்கு வாழ்ந்ததுண்டு. அவர்களுட் சிலர் வரதபண்டிதர் முத்துக்குமாரக் கவிராயர், சங்கரபண்டிதர், நாகநாத பண்டிதர், முருகேச பண்டிதர், குமாரசுவாமிப் புலவர், மாணிக்கத் தியாகராஜ பண்டிதர், என்போராவர். பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் எத்தனையோ கிராமங்களிற் சைவவித்தியாசாலைகள் ஆரம்பிக்கப்பட்டன. இங்கும் அப்படியாக ஒரு வித்தியாசாலை தாபனமாகாதிருந்தமை பெருங்குறைவாகவே இருந்தது. இதைக்கண்டு யாவரும் மனத்துயரமடைந்தனர். இதைக்குறித்து மயிலணியில் வாழ்ந்த அ. குமாரசுவாமிப்புலவர் 20-9-1880 இல் பின்வரும் ஒரு செய்யுளைப் பாடினார்.

''எம்முடைய சுன்னாகத்
திருநிதி யோடி
ருப்பீர்கள்
உம்முடைய வுடல்
போனால் உயிர்த்துணையா
யதுவருமோ
இம்மனுடயாக்கை பெற்று
மீது செய்யத்
தக்கதென்று
செம்மையுடனாராய்ந்து
செய்கிலீர் நீர்
செய்வீரே!''

இப்படியாகப் பாடல்பாடியும் எவராவது பாடசாலை கட்ட முன்வரவில்லை. 1909 ஆம் ஆண்டளவில் சேர் பொன் இராமநாதன் அவர்கள் பெண்களுக்காக மருதனாமடத்தில் இராமநாதன் கல்லூரியை உருவாக்கினார். இதன்பின் பல இடங்களிலும் பாடசாலைகள் உருவாக்கப் பிரசாரங்கள் நடைபெற்றன. மெஸ் டபிள்யூ. ஈ. பெல்ப்ஸ் என்னும் அமெரிக்க பண்டிதர் சி. வை. தாமோதரம்பிள்ளைபோன்றவர்களின் முயற்சியால் பாடசாலைகள் ஸ்தாபிக்கப்பட்டன. இக்காலை சுன்னாகத்திலும் பாடசாலை கட்ட வேண்டும் என்னும் பெரு நோக்குடன் ஒரு நிர்வாக சபை மு. வைத்தியநாத பிள்ளை, அ. குமாரசுவாமிப் பிள்ளை, சி. விசுவப்பா போன்றவர்களின் உதவியுடன் கூட்டப்பட்டது. இந் நிர்வாகசபையின் பெரும் முயற்சியால் சௌமிய வருடம் ஆடி மாதம், 1909ஆம் ஆண்டு மயிலணிக் கந்தசாமி கோவில் மண்டபத்தில் பதினைந்து மாணவர்களுடன் பிரம்மஸ்ரீ மு. இரத்தினேஸ்வர ஐயரைத் தலைமை ஆசிரியராகக் கொண்டு தமிழ்க் கலவன் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது. இப் பாடசாலைதான் சுன்னாகம் மயிலணிசைவவித்தியாசாலை இப்பொழுது பெரிதாகக் கட்டப்பட்டு 1962-ல் அரசினரால் அங்கீகரிக்கப்பட்டு சுமார் ஐந்நூறு மாணவர்களுடன் திரு. மா. குமாரஸ்வாமி என்பவரைத் தலைமை ஆசிரியராகக்கொண்டு இக் கல்வி நிலையம் இயங்கி வருகின்றது.

சுன்னாகம் மயிலணி சைவ வித்தியாசாலை இன்று தன் அறுபதாண்டு வைரவிழாவைக் கொண்டாடுகிறது.

—ஐ. முருகையா

விடயத்தில், பொதுச்சேவையிலுள்ள சிங்கள மக்கள் தமிழ்ப் பாஷையையும் தமிழ் மக்கள் சிங்களப் பாஷையையும் படிக்க வேண்டுமென்ற கோரிக்கையை யூ. என். பீ. கட்சியினர் ஏற்றனர். அவர்களுடைய தேர்தல் பிரகடனத்தில் இதுபற்றிச் சொல்லியிருந்தார்கள். அதற்குரிய பிரமாணங்கள் அரசாங்கத்தால் கொண்டுவரப்படும் என்றுசொன்னார்கள். ஆனால் இந்த நாட்டிலே அரசாங்க சேவையிலுள்ள தமிழ் ஊழியர்களைப் பெருமளவில் பாதிக்கச் செய்கின்றவர்கள் ஒவ்வொரு இலாகாவிலுமுள்ள வகுப்புவாதக் குழுவினரே தவிர இந்நாட்டு அமைச்சர்களோ அல்லது மற்றவர்களோ அல்லவென்பதைச் சொல்லத்தான் வேண்டியிருக்கின்றது. இந்த நிலையைத்தீர்த்துவைப்பதற்காக 700 701ஆம் இலக்கங்களைக்கொண்ட திறைசேரிச் சுற்றறிக்கைகளைக் குறிப்பாகக் கௌரவ பிரதமரவர்களுடன் கலந்தாலோசித்து வெளியிடச் செய்தோம். இந்தச் சுற்றறிக்கையின் பிரகாரம் கூட இந்த அரசாங்கம் நடந்துகொள்ளவில்லையென்ற குற்றச்சாட்டையும் சுமத்த வேண்டியிருக்கின்றது. எவ்வெக் காலத்தில், யார் யார் என்ன மாதிரிச் சித்தியடையவேண்டுமென்பதைக் கூட அந்தச் சுற்றறிக்கை எடுத்துக்காட்டுகிறது. ஒரு காலத்தில்அவர்களுடை பரீட்சைத்தரம் வெகு அதிகமாக இருந்தது. அந்தத் தரம் அரசாங்க சேவைக்குத் தேவையில்லை என்று கூறி அந்தத் தரத்தைக் குறைக்க வேண்டுமென்று சொன்ன போது அதை ஏற்றுக் கொண்ட பிரதம மந்திரி அவர்களும் மற்ற அமைச்சர்களும் அதை மந்திரிசபையின் திட்டமாகவும் வெளிப்படுத்தியிருந்தார்கள். ஆனால் இன்று, தரம் மோசமாகக் குறைக்கப்பட்டதென்ற காரணத்தைக் கூறி தங்கள் முதற்கொள்கைக்கேற்ப அரசாங்கம் நடக்கவில்லையென்றும் நான் சொல்ல வேண்டியிருக்கிறது.

1956 தொடக்கம்...

அடுத்த முக்கிய பிரச்னையாக இன்று இருப்பது சர்வகலாசாலைப் பிரச்னையாகும். தமிழ் மக்களுக்குச் சர்வகலாசாலை வேண்டுமென்று இன்று நேற்றல்ல, 1956-ம் ஆண்டு தொடக்கமே கேட்டோம். என்று இந்த நாட்டில் மக்கள் தமிழர், சிங்களவர்கள் என்று பிரிக்கப்பட்டார்களோ அதன் காரணமாக தமிழ்ப் பிரதேசங்களிலுள்ள கல்விமான்களும் நிபுணர்

பகிரங்கமாகக் கேட்கிறேன்.

பல்கலைக்கழகம்

1959-ம்ஆண்டு மே மாதம் 10-ம் திகதி திருமலையில் தமிழ்ச் சர்வகலாசாலைக்கு அத்திவாரம் இடப்பட்டது. அந்த நேரத்தில்சகலதமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களும் பட்டணசபை, நகரசபைத் தலைவர்களும் கல்விமான்களும் அந்த அத்திவாரக்கல்நாட்டு விழாவில் பங்குபற்றினார்கள். திருவாளர் பொன்னம்பலம் அவர்கள் இந்து சர்வகலாசாலை கேட்கிறார்என்று சொல்லும் நேரத்தில், அவருடைய கட்சியைச் சேர்ந்த முதலியார் முத்துத்தம்பி அவர்களும் ஜனாப் அபூசாலி அவர்களும் 1956-ம் ஆண்டுஜூன் மாதம் 26-ம் தேதி யாழ்ப்பாண முனிசிபல் சபையில் பிரேரித்த, எல்லா அங்கத்தவர்களும் ஒருமனதாக ஆதரித்தஒருபிரேரணையைப் பற்றி நான்சொல்லுகிறேன். அந்தப் பிரேரணையில், திருமலையில் சர்வகலாசாலை ஸ்தாபிக்கப்பட வேண்டிய காரணத்தைச் சொன்னார்கள். முதலியார் முத்துத்தம்பி அவர்கள் பேசும்பொழுது, 'அந்த இடத்தில்சர்வகலாசாலையை ஏன் ஸ்தாபிக்க வேண்டுமென்று கேட்கிறோமென்றால் அது ஒரு முக்கிய கேந்திர ஸ்தானமாக இருக்கிறது மாத்திரமன்றி, இரு தமிழ்ப் பிரதேசங்களுக்கிடையேயுள்ள ஒருமத்திய ஸ்தானமுமாகும் என்று கூறினார். அதுமட்டுமல்ல, அந்த நேரத்தில் திருமலை 'போட் பிரட்ரிக்' என்ற இடத்தில் இருந்த கட்டடங்கள் அனைத்தையும் கல்வி நிலையத்துக்காகப் பாவிக்கக் கூடிய வசதி இருக்கின்றன என்றும் சொன்னார். தமிழ்க் காங்கிரஸைச் சார்ந்த மூன்று அங்கத்தவர்களைத் தவிர மற்றைய எல்லா அங்கத்தவர்களும் திருமலையில் சர்வகலாசாலையை ஸ்தாபிக்கவேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். மக்கள் எந்த வசதியில்லாவிட்டாலும் கல்வி வசதியைப் பெறுவதன்மூலம் மற்றைய சகல வசதிகளையும் பெறமுடியும் என்ற அபிலாசையை, அந்த இலக்கை அந்தப்பெரியார் சொல்லிவைத்திருக்கிறார். யூத மக்கள், அந்த நேரத்தில் இருந்த நிலையை, அவர்களுடைய கஷ்ட நஷ்டங்களை யோசியாமல், ஒரு சர்வகலாசாலையைக்கொடுங்கள் என்று கேட்டார்கள். அதைப் போலத்தமிழ் மக்களும் தங்களுடைய பாஷையை, கலை, கலாசாரத்தைப் பேணுவதற்கு ஒரு

டாமா? நாளை உணவுக்காக இன்றே வைத்துள்ளதிலிருந்து உமக்குத் தெய்வத்திடம் பூரண நம்பிக்கை இல்லையென்றே தெரிகிறது. ஒன்று, அந்த ரொட்டி இந்த வீட்டிலிருந்து வெளியேறவேண்டும். அல்லது நான் வெளியேறிவிடுவேன்'' என்று அந்த மனையாள் கூறவே, வாலிபன் சற்றே உணர்ந்து திகைத்து, தன் குறையை உணர்ந்து வருந்தி அந்த ரொட்டியை வீசியெறிந்துவிட்டான். தனக்குப் பூரணதெய்வநம்பிக்கை ஏற்படச்செய்த மனைவிக்கு நன்றி செலுத்தித் திருந்திவிட்டான்.

நம்மில் அநேகமாக எல்லாருக்கும் தெய்வநம்பிக்கையுண்டு ஆனால்நாளைக்கென்று எதுவும் வைத்துக்கொள்ளாமல் தெய்வத்தையே நம்பியிருக்கக்கூடிய அளவுக்கு இக்கதையில் கூறியதுபோல் அவ்வளவு தெய்வநம்பிக்கை நம்மில் யாருக்கும் உண்டா?

பகவான் இக்கதையைக் கூறியதன் நோக்கமென்ன? நம்மில் பலரும் நமக்கு அதிக தெய்வபக்தி உள்ளதாக நினைத்துக்கொள்ளுகிறோமல்லவா? இக்கதையிலே அப்பெண்மணியின் தெய்வ நம்பிக்கையுடன் நம்மைச் சற்றே ஒப்பிட்டுப்பார்த்து, நமது நம்பிக்கையை நாமே அளவிட்டுக்கொண்டிருந்தத்தான்.

அப்பெண்மணியைப்போல் இக்காலத்திலே இரண்டொருவரும் இருக்கமுடியுமா என்பது சந்தேகம். என்றாலும், வீண் ஆசைகளையும், கவலைகளையும், விட்டு, பிறருக்கு இம்சை செய்யாமல் தெய்வத்தையே நம்பி வாழ, இக்கதை புத்திபுகட்டுவதாகவுள்ளது.

நேற்று முன்தினம் வீரசிங்கம் மண்டபத்திலே பக்தி சூழ்நிலையிலே யாழ். சத்ய சாயி சமிதியின் இரண்டாவது ஆண்டுவிழா சிறப்பாக நடைபெற்றது. கொழும்பு, திருகோணமலை, மலைநாடு முதலிய பல இடங்களிலிருந்துங்கூட பலர் வந்து இதில் கலந்துகொண்டனர். சிறப்பாக அதிகமான தாய்மார்கள் வந்து இதில் பங்குபற்றியது குறிப்பிடத்தக்கது.

கடைசியாக திருமதி சரஸ்வதி பாக்கியராஜா நடத்திய பஜனை பலரையும் மெய்மறக்கச்செய்தது. ஈழத்து மீராபாய் என்று கருதும்படி அவர் உணர்ச்சியுடன் இனிமையாகப் பாடினார்.

தமிழ்ச் சர்வகலாசாலை வேண்டுமென்று கோரினால், யாரோ ஒருவர் இந்து சர்வகலாசாலை வேண்டுமென்று கேட்டதனால் அது நின்று போய் விட்டது.

(தொடரும்)

காரங்களில் பணம் விரயமாகும். ஆணவப் போக்கினால் சந்தர்ப்பம் நழுவவிடப்படலாம். எதிரிகள் மறைமுகத் தாக்குதல் நடத்துவர். மேலிடத்து அபிப்பிராய பேதத்துக்கும் இடமேற்படும்.

கன்னி- இன்று முன்னணியில் நிற்பீர்கள் நல்ல தீர்ப்பு வழங்கும் சந்தர்ப்பமும் ஏற்படலாம். தெய்வநம்பிக்கை மேலோங்கும். குறிக்கோளில் வெற்றி கிடைக்கும். இலட்சியவாதிகளுக்கு இன்று பொன்னான தினம்.

துலாம்- கூட்டு வியாபாரத்தில் முன்னேற்றமுண்டு. வெளியூரிலிருந்து திருப்திகரமான செய்தி கிடைக்கும். கடமையில் ஆர்வம் பிறக்கும். டாக்டர்களுக்குச் செல்வாக்குப் பெருகும். நிம்மதியானதினம்.

விருச்சிகம்-புதிய கோணத்திலிருந்து பொருள் வரவுக்கு இடமுண்டு துணிவையே துணையெனக்கொண்டு காரியங்களைச் சிறப்பாகச் செய்வீர்கள். பொதுசனத் தலைமையுடன் புகழும் தேடிவரும். வெற்றி தினம்.

தனுசு- மனதில் விரக்தி நிலை தென்படும். உடல் நலமும் பாதிக்ப்படலாம். கால்நடைகளினால் நஷ்டமேற்படும். பூமிப் பிணக்குகளின் மூலம் வழக்கு விவகாரங்களிலும் மாட்டிக்கொள்ள நேரிடலாம்.

மகரம்- சுறு சுறுப்புக் குன்றும். உமது சொந்த வாழ்க்கையில் மற்றவர்கள் தலையிடுவார்கள் குடும்பத்தில் சிறு பூசல் தோன்றி மறையும். கொள்கையில் கோணலுடன் கோபமும் அதிகரிக்கும். அமைதி நன்று.

கும்பம்- போதுமென்ற மனத்துடன் செயலாற்றுவீர்கள். களஸ்திரவழியால் பெருமைகள் வந்து சேரும். ஆவலுடன் எதிர்பார்க்கும் அன்பான கடிதமொன்று இன்று கிடைக்கலாம். தொழில் துறையிலும் வெற்றியுண்டு.

மீனம்- கோபத்தைத் தூண்டி விடுவதற்குத் தூபம் போடுவார்கள் சிலர். நன்றாக நிதானித்ததன் பின்பு எந்த நடவடிக்கையும் எடுப்பது விரும்பத்தக்கது. பிறரிடம் சொந்தவிடயங்களைக் கூறவேண்டாம்.

திருமலை
க. வேலுப்

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 63ம்இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1969ம் ஆண்டு ஜூலை மாதம் 30-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org